விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 18 முஹறம் 8 இதழ் 232
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 4-10-84

## ராணுவ வீரரே சுட்டுக்கொன்றார்!

(லண்டன்)

பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் அக்கினோவை ராணுவ வீரர் ஒருவரே சுட்டுக்கொலை செய்தாரென ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவரின் கொலைசம்பந்தமாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஆணைக்குழு தனது விசாரணையை முடித்துள்ளது.

மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் நடந்த பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித்தலைவரின் படுகொலை குறித்து நடந்தவிசாரணையில் இந்த விசாரணைக் குழுவுக்கு பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இவரை கொலைசெய்ததாக இரண்டு ராணுவ வீரர்களது பெயர்கள் குறிப்பிடப்பட்ட போதிலும், இந்த இருவரில் எவர் சுட்டார்கள் என்பதனை இனங்கண்டுகொள்ள முடியவில்லை என்றும் அந்த ஆணைக்

(8-ம் பக்கம் பார்க்க)

அரசு அறிக்கை:

## ஆயுதம் வாங்க இப்படிச் செய்கிறார்களாம்

[கொழும்பு]

வடபகுதியிலுள்ள தீவிரவாத இளைஞர்களுக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதியைச் சேகரிப்பதற்கு போதைவஸ்துக் கடத்தலில் ஈடுபட்ட இளைஞர்கள் குறித்துத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக அரசு அறிக்கையொன்று தெரிவித்தது. இதனை நேற்று இரவு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அறிவித்தது.

★ சபைத் தலைவர்—அமைச்சர் சந்திப்பின் எதிரொலி

# இன்று முதல் மீண்டும் வழமையான பஸ்சேவை!

# 'மூடுவிழா' யோசனை தற்காலிகமாக கைவிடப்பட்டது!?

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் இன்று முதல் வழமையான பஸ் சேவை நடைபெறும். வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் போக்குவரத்து அமைச்சரைக் கண்டு; பிரயாணக் கஷ்டம், பஸ் ஊழியர் பாதிப்புக் குறித்து வலியுறுத்தியதைத் தொடர்ந்தே மேற்படி முடிவு சில நிபந்தனைகளுடன் எடுக்கப்பட்டது.**

மேற்படி முடிவைத் தொடர்ந்து கடந்த இரு தினங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாண டிப்போவின் பஸ் சேவை இன்று வழமைபோல் நடைபெறும்.

பருவகாலச் சீட்டு [சீசன்] வைத்திருப்பவர்கள் மட்டுமின்றி, சகல பியாணிகளும் வழமைபோல் பயணம் செல்லலாம் என்றும், யாழ் டிப்போவை மாற்றும் முடிவு தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாகவும் வ. பி. பி.போ சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். டிப்போ ஊழியர்கள் எவரும் அநுராதபுரம் செல்ல வேண்டியதில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வ பி. போ. சபைத்தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் இங்குள்ள நிலைமையை விளக்கியதைத் தொடர்ந்து போக்குவரத்து அமைச்சர் ஜனுப் எம். எச். முகமட் இன்று முதல் வழமையான சேவையை நடத்துமாறு பணித்துள்ளார்.

அமைச்சருடன் நடந்த சந்திப்பில்; பஸ் சேவை நிறுத்தப்படுவதால் யாழ். பஸ் டிப்

[8ம் பக்கம் பார்க்க]

யாழ். ஐ. வி. சங்கத்துக்கு

## காப்புறுதிப் பணம் கிடைக்கவில்லை!

### நஷ்டஈடும் கேள்விக்குறி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபார சங்கத்திற்கு இன்னும் காப்புறுதி (இன்சூரன்ஸ்) பணம் கிடைக்கவில்லை என்று சங்கவட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வருடம் ஏப்ரல் 9ம் தேதி சங்கக்கட்டிடம் தீக்கிரையானதைத் தொடர்ந்து சுமார் 40 லட்சம் ரூபா, இன்சூரன்ஸ்பணம் வழங்குமாறு கோரப்பட்டிருந்ததாகவும், இப்பணம் இன்னும் கிடைக்க

(8-ம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவில் நடக்கும் சோதனையால்

## விவசாயிகள்பெரிதும்பாதிப்பு

### அரசஅதிபரிடம் பிரஜைகள்குழு முறையீடு

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயுதப்படையினரின் திடீர் சோதனைகளினால் விவசாயிகள், வெளியில் செல்ல அச்சமடைந்துள்ளனர். இதனால் அப்பகுதியில் விவசாயச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு பிரஜைகள்குழுவினர் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரனை நேற்றுமுன்தினம் சந்தித்து மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

முல்லைத்தீவு பிரஜைகள் குழுவில், தலைவர் பி. குணரத்தினம், செயலாளர் திரு. ஞானமுத்து செபமாலை, செயற்குழு உறுப்பினர் திருவாளர்கள் எ. எல். எம். லெப்பை. லியோ பெர்ணண்டோ, ஜேம் ஜோச் ஆகியோர் சென்றிருந்தனர்.

குமுளமுனை, தண்ணீரூற்று, முள்ளியவளை பகுதிகளில், இராணுவத்தினர் வீடுகளில்

[8ம் பக்கம் பார்க்க]

## நவாலியில் பாதுகாப்புப்படை சோதனை

(மானிப்பாய்)

பாதுகாப்புப்படையினர் நேற்று நவாலிப்பகுதியில் சோதனை மேற்கொண்டு தேடுதல்களை நடத்தினர்.

வேலணை ப.நோ. கூ.சங்க கொள்ளை முயற்சி

## போலித் துப்பாக்கி இளைஞர்சிக்கினர்!

[வேலணை நிருபர் இ சற்குநநாதன்]

வேலணை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்க வந்த இளைஞர்களுக்கும், ஊழியருக்குமிடையில் நடந்த பலத்த மோதலின் பின்னர் சங்கத் தலைவர் திரு. பாலச்சந்திரன், இளைஞர் ஒருவரைமடக்கி பிடித்து அவர் வைத்திருந்த போலித் துப்பாக்கியையும் கைப்பற்றினர்

ஆறு இளைஞர்கள் துப்பாக்கியுடன் வான் ஒன்றில் வந்து கொள்ளையடிக்க முயன்றபோது, தலைவரின் தலைமை

(5ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் நிலையத்தை மாற்றுமாறு ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

''வடமராட்சி மாணவர் பிரச்னையில் உடனடியாகத் தலையிட்டு, பருத்தித்துறையில் பொலிஸ் நிலையத்தை தற்போதுள்ள இடத்திலிருந்து மாற்றிமாணவர்கள் பயமின்றிப் பாடசாலை செல்ல வழி செய்யுங்கள்''

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு, யாழ். பல்கலைக்கழகத்தில் பயிலும், ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர் நேற்று அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு கோரியுள்ளனர்.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: ''பருத்தித்துறை ஹாட்லிக்

[8ம் பக்கம் பார்க்க]

## உண்ணாவிரதம்தொடருகிறது!

[புலோலி]

புலோலி தேவாலயத்தில் கடந்த 3 தினங்களாகதொடர்ந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட 5 மாணவரும் 5 மாணவிகளும் நேற்றுக்காலை, உண்ணாவிரதத்தைநிறுத்திக்கொண்டனர்.

நேற்றுக்காலை 18 மாணவரும் 5 பாணவியும், உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தார்கள். இவர்கள் உண்ணாவிரதம் 3 தினங்கள் நீடிக்கும். இதன் பின் மற்றொரு குழுவினர் உண்ணாவிரதத்தை தொடருவார்கள் (க)

யாழ் பல்கலைக்கழகத்தில் பயிலும்

## ஹாட்லி பழைய மாணவர் 'லலித்'தை சந்திக்க ஏற்பாடு

### அரச அதிபரைச் சந்தித்து நிலைமையை விளக்கினர்

— கா யோகநாதன் —

''யாழ். பல்கலைக்கழகத்தில் பயிலும், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர் ஹாட்லி கல்லூரி அதிபர் ஆகியோரைக் கொண்ட குழுவினர், தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலியை நேரில சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்ய முயற்சிக்கிறேன்''

யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், நேற்றுக்காலை, தம்மைச் சந்தித்த யாழ். பல்கலைக்கல்லூரியில் பயிலு ஹாட்லி பழைய மாணவர் குழுவிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

மாணவர்கள் சுமார் 80பேர் அரசாங்க அதிபரைச் நேற்றுச் சந்தித்து பேச்சுவார்த்தை

[8ம் பக்கம் பார்க்க]

## நிலவரைபடங்கள் கொள்ளை

[கிளிநொச்சி]

கிளிநொச்சி காணி அலுவலகத்திலும், காட்டு அலுவல

(5-ம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதத்தைகைவிட மறுப்பு!

[புலோலி]

உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அபிவிருத்தி சங்கத்தினர் நேற்று முன்தினம் விடுத்த கோரிக்கையை மாணவர்கள் நிராகரித்தனர்.

கல்லூரி அபிவிருத்தி சங்கத்தைக் கூட்டுமாறு உறுப்பினர்கள் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து அவசரமாக அபிவிருத்தி சங்கம் கூட்டப்பட்டது

இக்கூட்டத்தில், மாணவர் உண்ணாவிரதம்பாதுகாப்பின்றியிருப்பதாகவும், பெற்றோருக்கு கவலையளிப்பதாகவும்

5-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

குமரகோட்டம் கோண்டா வில் மேற்கில் சகல வசதியு டன் 4 பரப்புக் காணி விற்ப னைக்குண்டு. தொடர்பு: உரும் பிராய், 'யூனிபோ'க்கு முன் பாக. M. S. பாலன், உரும் பிராய் தெற்கு. 2049

நல்ல நிலைமையிலுள்ள 28 ஸ்ரீ 6486 இலக்கமுடைய ELF 250, இரண்டு சக்கர லொறி விற்பனைகுண்டு. விபரம்: 'விம லாஸ்', சாவகச்சேரி. 2053

மிகவும் நல்ல நிலையிலுள்ள கடைத் தளபாடங்கள், லாச்சி கொண்ட Filing Steel Cabinets, திண்டுக்கல் 2 அடி இரும் புப் பெட்டி என்பன விற்ப னைக்குண்டு. தொடர்பு: T.N. லிங்கம் பாட்ஸ் கடை, 248, காங்கேசன்துறை வீதி, யாழ்ப் பாணம். 9

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவில் முன் ஒழுங்கையில், மெயின் ரேட்டில் இருந்து 50 யார் தூரத்தில் 1½பரப்புகாணி விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. குலசேகரம், 37/5, சேர் பொன். ராமநாதன் ரேட். யாழ்ப்பாணம். 2044

நல்ல நிலையில்உள்ள EN 6214 மொறிஸ் மைனர் விற்பனைக் குண்டு. ராஜா ஸ்ரோர்ஸ், கல் லூரி வீதி, காங்கேசன்துறை. 23

இரும்புக் கதிரைகள் 150 விற்பனைக்குண்டு. தொடர்பு: ஏ. கே சுப்பிரமணியம், 57, இராமநாதன் ரேட், யாழ்ப் பாணம். 2052

மானிப்பாயில் பட்டின சபை யையும், சுதுமலை அம்மன் கோவிலையும் இணைக்கும் ஒழுங் கையில் காலஞ்சென்ற சின்னத் துரை ஆசிரியரின் வீட்டிற்கு கிழக்கே 2 பரப்புக்காணி விற் பனைக்கு உண்டு. உடன் தொடர்புகொள்ளவும்: சு. கணேசலிங்கம் ஆசிரியர் வீமன் காமம், வடக்கு, தெல்லிப் பளை. அல்லது சு. சிறீகாந்த லிங்கம் 53, 'சூ' ரேட், கொழும்பு-13. 14

ஜெனறேற்றர் (Robin) புதி யது G L 151 1½ கி. லோல்ற், 1500 வாற்ஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு க. கோபாலசிங்கம், 852/13 செட்டியார் தோட்டம் பருத்தித்துறை வீதி, நல்லூர். 13

ஹப்புத்தளையில் பிரத்தியேக மாக அரிந்ததும், அலுமாரி, தளபாடங்கள் செய்வதற்கு உகந்ததும், பூச்சிகள் தாக் காது நறுமணம் உடையது மான, ஒவ்வொன்றும் 6 அங் குலத்திற்கு கூடுதலான அகல முள்ள 2000 சதுர அடிக்கு மேற்பட்ட 'தூணு' (Cypress) மரப் பலகைகள் மொத்தமாக விற்பனைக்குண்டு. விலை ரூபா 46 000/- மேல் நேரில் வரவும். அழகரத்தினம், 21/1 றக்கா ரேட், யாழ்ப்பாணம். 17

டெலிக்கா வான் 38 சிறீ புதிய நிலையில் 5 கதவுகள் ஒற்றை பார் 'தூக்கு பெடில்' ரூபா 65,000/- 466/4 மூத்த தம்பி அவன்யு நாவலர் வீதி, தொலைபேசி 22029. 18

## விற்பனைக்கு

3 ஸ்ரீ தொடர் இலக்கம் உள்ள ஒஸ்ரின் கேம்பிறிஜ் (Austin Cambridge) கார் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு S. வேலாயுதம். "முருகன் ஸ்ரோஸ்" பருத் தித்துறை வீதி, காங்கேசன் துறை (மகாவித்தியாலயத் திற்கு அருகாமை). 19

நல்ல நிலையிலுள்ள 36 Sri (British Model 'பேர்குசன்' ரைக்ரர் விற்பனைக்குண்டு. விபரம் க ஜெகதீசன், அர சாங்க ஒப்பந்தகாரர் அள வெட்டி தெற்கு, அளவெட்டி. 28

மோட்டார் சைக்கிள் கொண்டா CG 125 Deluxe Model முதல் உரிமையாளரின் சிறந்த பராமரிப்பு குறைந்த மைல் ஓட்டம், 88 Sri தொடர். தொடர்பு கொள்க:- 9A, விதானையார் ஒழுங்கை, சுண் டிக்குளி. 26

## தவறிவிட்டது

ஆ. அற்றியானந்தம் என்ப வரின் ஆசிரிய முதல் நியமனக் கடிதம் (இல: 707005) பண் டத்தரிப்புக்கும், இளவாலைக் கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து "சூரியோதயம்", இளவாலையில் மேற்படி நப ருக்கு அனுப்பிவைக்கவும். 11

## யாருடையது?

கட்டாக்காலி பசுமாடு ஒன்று ஆனைக்கோட்டை ஆறுகால் மடம், பள்ளிக்கூடம் ஒழுங் கையில் "ஸ்ரீ ராமபவனம்", இல்லத்தில் கட்டப்பட்டுள் ளது. உரியவர் அடையாளம் காட்டிப்பெற்றுக்கொள்ளவும்- சி. எஸ். முருகையாபிள்ளை 25

## FOR SALE

Excellent Building Blocks available for immediate sale along Samuel Mann Road, Uduvil. Close to Uduvil Girls College. Inquire from: Advertiser, 26N Government Flats Colombo 4. 24

## VACANCIES

Following required for immediate employment

**Book-keeper,**

**Typist**

(Tamil/English)

Apply immediately giving full bio-data to

ACCOUNTING SERVICES
c/o K. Pirapagaran
Sannathy Road,
Atchuvely.

2048

## தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல நிறுவனமொன்றிற்கு

**மேற்பார்வையாளர்கள், ஸ்ரோக்கீப்பர், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், விற்பனைப் பிரதிநிதிகள், சிட்டை எழுது நர்கள், தொழிலாளர்கள், பியோன் (PEON), சாரதிகள் தேவை.**

முற்பணம் ரூபா 5000/- செலுத்தக்கூடியவர்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்க.

யாழ், மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விளம்பர இல. 12,
"ஈழநாடு" யாழ்ப்பாணம். 12

வரையுள்ள நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கம்
(யா-1662 — 5 12-1979)

## அறிவித்தல்
### வாக்காளர் இடாப்பு மூடுதல்
### 31 - 12 - 1984

இவ்வாண்டிற்கான வாக்காளர் இடாப்பு 31-12-1984லுடன் மூடப்படுகிறது.

12-01-1982ல் நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் 6-வது தீர்மானத்தில் திருத்தம் செய்யப்பட்ட உபவிதி 18 (1) படி ஒரு பங்கின் பெறுமதி ரூபா ஒன்றில் இருந்து ரூபா பத்தாக (10/-) மாற்றப்பட்டுள்ளது. எனவே இதுவரையில் ரூபா பத்து (10/-) செலுத்தாமல் உள்ள அங்கத்த வர்கள் மிகுதிப் பணத்தை செலுத்தி உங்கள் வாக் குரிமையை உறுதி செய்து கொள்ளவும். இதுவரை யில் சங்கத்தில் அங்கத்துவம் பெறுமல் உள்ளவர் களை ரூபா பத்து செலுத்தி அங்கத்தவராகி உங்கள் வாக்குரிமையை பெறும் வண்ணம் தயவாகக் கேட் டுக்கொள்ளுகின்றேன்.

இரா. தர்மலிங்கம்
செயலாளர்.

நெடுந்திவு ப. நோ. கூ சங்கம்,
நெடுந்தீவு.
3-10-1984. 21

# சில்லாலையில் மின்விநியோகத்துக்கு புதிய 'ரான்ஸ்போமர்'!

(பண்டத்தரிப்பு)

சில்லாலை சேமக்காலையில் நீண்டகாலமாகப் பாவனைக்கு வசதியற்ற நிலையில் இருந்து வந்த பொதுக்கிணறு யாழ். அபிவிருத்திச் சபையின் பண் டத்தரிப்புப் பட்டின உப-அலுவலக அதிகாரமளிக் கப்பட்ட உத்தியோகத்தர் மேற்கொண்ட நடவடிக்கை யினுல் உடனடியாகப் புனர மைப்புச் செய்யப்பட்டுள்ளது.

சில்லாலை கிராம அபிவிருத் திச் சங்கம் நடாத்திய சில் லாலை அபிவிருத்தி தொடர் பான கலந்துரையாடலில் பண் டத்தரிப்பு பட்டின உப-அலு வலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எஸ். ரி. கதிரவேலுப்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்து கொண் டார். அத்தருணம் சங்கச் செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்ஞசித்தம்பி சில்லாலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலை கள் குறித்து விபரமாக எடுத் துக் கூறினுர்,

சில்லாலையில் மின்சார விநி யோகத்தைச் சீர்படுத்தச் சுமார் 4இலட்ச ரூபா செல வில் புதியரான்ஸ்போமர் சாத னம் எதிர்வரும் டிசம்பர்மாதத் திற்கிடையில் நிறுவப்படவுள் ளதாகவும், இதற்குப்பின் மின் சார விநியோகம் சுமுகமாக இயங்கும் என்றும் திரு. கதிர வேற்பிள்ளை அங்கு தெரிவித் தார். சில்லாலை சேமக்காலை யில் மின்விளக்கு ஒன்றை அமைக்க நடவடிக்கை மேற் கொள்வதாகவும், அங்குள்ள பொதுக்கிணற்றைத் திருத்த உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுவதாகவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக் கட்டுவன் அச் செழு சுவினைதெற்கு உதய கலா சனசமூக நிலையத்தின் புதிய கட்டிடம் இன்றுமாலை திறந்துவைக்கப் படும் இவ்விழாவைத் தொடர் ந்து நடைபெறும் சனசமூக நிலையப் பொதுக் கூட்டத்தில் பல சனசமூகநிலையப் பிரதி நிதிகள் கிராமசேவகர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்

(ப)

## "மதுபர்க்க நிவேதனம்"

இப்பொழுதுஎல்லா ஆலயங் களிலும் நவராத்திரி பூஜை கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அன்னைபராசக் தியை விசேஷமாக கும்பத் தில் வ்யஷ்டியாக (அதாவது துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி யாக) ஆவாஹித்து பூஜை செய்து விரதமனுஷ்டிக்கும் முறை இந்த நவராத்திரி தினங்களில் அனுஷ்டிக்கப்படு கிறது. இப்பொழுது பல ஆல யங்களில் ஸ்ரீசக்கரம் பிர திஷ்டை செய்யப்பட்டிருக்கி றது. இக்காலங்களில் அம்பி கையை ஸ்ரீசக்கரத்தில் இருத்தி பூஜிக்கும் முறையும் அனுஷ் டிக்கப்பட்டுவருகிறது. கும்ப பூஜைக்கும்சரி ஸ்ரீசக்கரபூஜைக் கும்சரி முக்கியமான நைவேத் யம் மதுபர்க்கமாகும் ஆக மங்களில் கூறியவிதிப்படி தயாரிக்கப்படும் மதுபர்க்கம் தேவாமிருதத்திற்கு ஒப்பாகும் அதுமட்டுமல்ல அவ்வமிர்தம் தீராத நோயையும் தீர்க்கவல் லது. காமிகாமகத்தில் மது பர்க்கநிவேதனம் தயாரிக்கும் முறைகூறப்பட்டுள்ளது. தேன் பால், தயிர். நெய், கருப்பச் சாறு, இளநீர், விளாம்பழம், கதலிப்பழம், மாம்பழம், பலாப்பழம், தேசிப்பழம், பேரீச்சம்பழம், மாதுளம்பழம் இவற்றின் சாற்றேடு ஏலம், குங்குமப்பூ, பச்சை கற்பூரம், சாதிக்காய், கற்கண்டு, சர்க் கரைஇவற்றைபொடிபண்ணிச் சேர்த்தால் அது விதிமுறைப் படி சேர்க்கப்பட்ட மதுபர்க்க மாகும். இவைகிடைக்காதபட் சத்தில் பால்,தேன்,கற்கண்டு ஏலம்,குங்குமப்பூ இவ் வைந் தையும் சேர்த்து நிவேதிக்க லாம் இவையும் கிடைக்காத பட்சத்தில் பாலையும் தேனை யும் மட்டும் கலந்து நிவேதிக் கலாம் அம்பிகைக்கு பிரீதி யானது அவசியம் கும்பத் திற்கும் நிவேதிக்க வேண்டி யதும் இம்மதுபர்க்கமாகும்.

-சிவஸ்ரீ
தா. மகாதேவகுருக்கள்

## இணுவில் இந்து சமய அறிவுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

இணுவில் இந்துமகாசபை நடத்தும் சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் சனிக்கிழமை நடை பெறவுள்ளது. சிவகாமி அம் பாள் தங்கரதபவனி தினமான அன்று அங்குவைத்து பரிசில் கள் வழங்கப்படும்.

இப் போட்டி முடிவு திகதி விஜயதசமி தினமான இன்று வியாழக்கிழமையாகும். சமய நூல்களைத் தேடிக்கண்டுபிடித் துப்படிக்க ஊக்குவிக்கும் நோக்கத்துடனேயே இம்முறை போட்டிக்கான கேள்விகள் அமைந்துள்ளதாக மகாசபைச் செயலாளர் தெரிவித்தார்.

## இன்று வித்தியாரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடை பெற்றுவரும் சிவானந்த சிறு வர் சமயபாடசாலையில் இன்று வியாழக்கிழமை காலை வித்தி யாரம்பம் நடைபெறும்.

## மோட்டார் சைக்கிள் கடத்தப்பட்டது

(மாவிட்டபுரம்)

பாடசாலைக்குப் பிள்ளைகளை ஏற்றிச் சென்ற நபரொரு வரின் மோட்டார் சைக்கிள் இடைவழியில் துப்பாக்கிவாலி பர்களால் கொள்ளையடிக்கப் பட்டுக் கடத்திச் செல்லப்பட் டுள்ளது.

அச்சுவேலியைச் சேர்ந்த எஸ். சிவபாலன் என்பவரது மோட்டார் சைக்கிளே இவ் வாறு கொள்ளையடிக்கப்பட் டுள்ளது.

தமது மோட்டார் சைக் கிளில் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு ஏற்றிச் சென்ற சமயம் இரு துப்பாக்கி வாலி பர்கள் அவரை வழிமறித்து மோட்டார் சைக்கிளைக்கொள் ளையடித்துக் கடத்திச் சென்ற தாகக் காங்கேசன்துறைப் பொலிசில் அவர் புகார் செய் துள்ளார். பொலிசார் இது பற்றி விசாரணை மேற்கொண் டுள்ளனர்.

## சேமக்காலையில் சிரமதானம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை கத்தோலிக்க சேமக்காலை சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முயற் சியினுல் இம்மாதம் 23ம் திகதி தீபாவளி தினத்தன்று சிரம தானமூலம் புனரமைப்புச் செய்யவுள்ளது.

இச்சிரமதான பணியில் சில் லாலைப் பகுதியிலுள்ள சகல பொதுநல இயக்கங்களும் கலந்து கொள்ளவிருப்பதாக சங்கச்செயலாளர் டாக்டர் கந்தன் இன்ஞசித்தம்பி தெரிவித்தார்.

# அமெரிக்காவின் 'சலஞ்சர்' விண்கலத்தில் 7பேர் பயணம் செய்கின்றனர்!

## 2 பெண்கள், ஒரு கனேடியரும் அடங்குவர்!!

(வாஷிங்டன்)

**அமெரிக்காவின் 'சலஞ்சர்' விண்வெளிக் கலத்தில் முதன் முறையாக 7 பேர் விண்வெளிப் பயணம்செய்து புதிய சாதனையொன்றை ஏற்படுத்தவுள்ளனர்.**

தமது 6-வது விண்வெளிப் பயணத்தை நாளை ஆரம்பிக்கும் சலஞ்சர்' விண்கலத்தில் பயணம்செய்யும் 7 பேரில் இருவர் பெண்களாவர். முதன் முறையாக ஒரு கனடா நாட்டு விண்வெளிவீரரும் இதில் பயணம் செய்கிறார்.

அமெரிக்காவின் பிரதான விண்வெளி ஆராய்ச்சி நிலையமான 'நாசா' இத்துடன் 13 விண்வெளிக் கலங்களை விண்வெளிக்கு அனுப்பியுள்ளது.

8 தினங்கள் விண்வெளியில் தங்கியிருக்கும் 'சலஞ்சர்' கலம் இந்நாட்களில் விண்வெளி பற்றியும் விண்வெளியில் இருந்துகொண்டு பூமியைப் பற்றியும் பல ஆய்வுகளை மேற்கொளளும். முக்கியமாகக் கதிர் இயக்கம்பற்றியும், உலகின் கால நிறையைப் பூமியின் ஓரிடத்தில் இருந்துகொண்டு அறிந்துகொள்வதற்கும் இந்தப் பயணம் வழிவகுக்கும்.

கடந்த பத்து ஆண்டுகளாக அமெரிக்க விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வின் பலாபலன்கள் இந்த விண்வெளிப் பயணத்தின்போது நிறைவுபெறுமென நம்பப்படுகிறது. [சூ]

## பங்களாதேஷில் முக்கிய அமைச்சர் ராஜினமா!

டாக்கா, அக். 3

பங்களாதேஷில் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான மகதூர் ரகுமான் தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

ஜனதிபதி எர்ஷாட் ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்திலிருந்தே அமைச்சர் பதவியை வகித்த இவர், ஜனதிபதியின் பிரதம இராணுவ ஆலோசகராகவும் இருந்தார், இவரது ராஜினமாவை ஜனதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார். ஆனலும் ராஜினமாவுக்கான காரணம் எதுவும் தெரியவில்லை.

இதேவேளை, "நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கான தமது நோக்கத்தை எதிர்க்கட்சிகள் குழப்பிவருகின்றூர்கள். எத்தகைய தடைகள் ஏற்படினும் டிசம்பர் மாதம் 8ம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும்'' என்று ஜனதிபதி எர்ஷாட் தெரிவித்துள்ளார். (சூ)

## "தாயகம் செல்லும் பயணிகளுக்கென இரு விசேட கப்பல் சேவை"

### தமிழக கப்பல் கூட்டுத்தாபன முகாமையாளர் தகவல்

[மன்னர்]

''**பிரயாணிகளின்** தொகை அதிகரித்து இம்மாதம் 20ம் திகதிக்கு முன் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து தாயகம் செல்லும் பிரயாணிகளுக்கு தலைமன்னர் - ராமேஸ்வரக் கப்பலில் இடம் கிடைக்காதுவிட்டால்' இரு விசேட கப்பல் சேவைகள் நடத்தப்படும்.''

இவ்வாறு தலைமன்னர்-ராமேஸ்வரம் கப்பலில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய இந்திய கப்பல் கூட்டுத்தாபன முகாமையாளர் திரு. ராமச்சந்திரன் தெரிவித்தார்.

மன்னர் அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மன்னர் மேலதிக அரசாங்க அதிபர் ஜனப் எம். எம். மக்பூல், தலைமன்னர் துறை குடிவரவு, குடியகல்வு அதிகாரி திரு. லொக்கு பாலசூரிய, சுங்க கலெக்டர் திரு. குமாரசாமி, ரயில் நிலைய அதிபர் திரு டயஸ், இந்திய தூதரகத்தின் தலைமன்னர் துறைப் பிரதிநிதி திரு. எஸ். ரங்கநாதன், இராணுவ லெப்டினன்ட் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய இந்திய கப்பல் கூட்டுத்தாபன முகாமையாளர் தமது உரையின் போது கூறியதாவது:-

''காலநிலை சீர்கேடு காரணமாகச் சேவையை இடைநிறுத்தவுள்ள தலைமன்னர்-ராமேஸ்வரம் கப்பல் எதிர்வரும் அக்டோபர் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் மன்னர் நீரிணையைக் கடந்து பம்பாய்க்குச் செல்லவேண்டும்

'இம்மாதம் 30ம் திகதிக்கு முன் தலைமன்னர் - ராமேஸ்வரம் கப்பல் மன்னர் நீரிணையைத் தாண்டிச் செல்லாதுவிட்டால் சுற்றிவளைத்தே பம்பாய்க்குச் செல்ல வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் கப்பல் பம்பாய்க்குச் செல்லாது விட்டால் கப்பல் திருத்தும் வேலைகளும் தாமதமடையும். இதனல் அடுத்தவருடம் ஆரம்பிக்கப்படும் கப்பல் சேவையும் தாமதமடையலாம். எனவே இம்மாதம் 20ம் திகதிக்குப்பின் விசேட கப்பல் சேவைகளை நடத்தமுடியாது. வேண்டுமானல் தலைமன்னரிலிருந்து ராமேஸ்வரத்திற்கு மட்டும் இரு விசேட கப்பல் சேவைகளை நடத்தலாம்.''

## இறுதிக் கிரியைகளில் எம்.ஜி.ஆர் கருணநிதி

(சென்னை)

காலஞ்சென்ற ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் திரு என். டி ராமராவின் மனைவி பகவதாரகத்தின் உடல் நேற்று முன்தினம் சென்னை மேலார் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது கடைசி மகன் கிருஸ்ண தாயாரின் உடலுக்குதீ மூட்டினர்.

இறுதிக் கிரியைகளில் தமிழ் நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன்' தி.மு.க. தலைவர் திரு. கருணநிதி, தமிழக ஆளுனர் குரான ஆந்திரப் பிரதேச மந்திரிகள் திரைப்பட நடிகர்கள் மற்றும் கலைஞர்கள் கலந்து கொண்டனர்

## விபத்தில் பெண் பலி

(யாழ்ப்பாணம்)

ஏழாலையில் நடந்த சயிக்கில் விபத்தில் கே சின்னமா என்ற பெண் பலியானர் இவர் காயமடைந்ததும் யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு அங்கு மரணமானர் (சு)

## காங்கேசன் துறைமுக வசதிகள்:

# ஜப்பான் நிறுவன பிரதிநிதிகள் வெறுங்கையுடன் திரும்பினர்!

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை துறைமுகத்தின் வசதிகள் பற்றி ஆராய வந்த ஜப்பான் நிறுவன பிரதிநிதிகள் அதுபற்றி ஆராயாமலே திருப்பிச் செல்ல நேரிட்டதால் காங்கேசன் துறையில்ருந்து திருமலைக்கு கிலிங்கர் எனப்படும் சிமெந்தின் மூலப் பொருளை அனுப்புவது தடைசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட் ஸ்தாபனத்திலிருந்து திருமலையிலுள்ள ஜப்பான் உதவிபெறும் சிமெந்து உற்பத்தித் தொழிற்சாலைக்கு கிலிங்கர் எனப்படும் சிமெந்தின் மூலப் பொருளை பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

இதற்கிணங்க ஜப்பான் நிறுவன பிரதிநிதிகள் காங்கேசன் துறை துறைமுகத்திற்கு விஜயம் செய்து கப்பல் மூலம் திருமலைக்கு கிலிங்கரை ஏற்றிச் செல்வது தொடர்பான வசதிகள் குறித்து ஆராய விரும்பி இங்கு வந்திருந்தனர்.

ஆனல் துறைமுகப்பகுதியில் கடமையிலிருந்த கடற்படையினர் மேற்படி ஜப்பான்பிரதிநிதிகள் துறைமுக வசதிகள் பற்றி ஆராய தடை விதித்தமையால் அவர்கள் அதுபற்றி ஆராயாமலே திரும்பிச்செல்ல நேரிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி ஏற்பாட்டின் பேரில் காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட்டிலிருந்து பெருமளவுகிலிங்கர் திருமலைக்கு அனுப்பப்பட விருந்ததாகவும், தற்சமயம் அதற்கு தடை ஏற்பட்டுள்ளதால் லங்கா சிமெந்து லிமிடெட்டுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அதன் அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்

## ஆட்டோ ரிக்ஷாவில் பிரசவம்!

(கொழும்பு)

இளம் பெண்ணெருவர் ஆட்டோ ரிக்ஷா வண்டியொன்றில் குழந்தையொன்றைப் பிரசவித்தார். இச்சம்பவம் களுபோவிலையில் நிகழ்ந்தது.

பிரசவ வேதனை ஏற்படவே அப்பெண் ஆட்டோரிக்ஷா ஒன்றில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனல் அங்கு வானில் உள்ளே செல்வதற்கான தள்ளுவண்டியைப் பெற சுமார் அரைமணித்தியாலம் வரை அந்த ரிக்ஷாவினுள்ளேயே அவர் இருக்க வேண்டியதாயிற்று இவ்வேளையிலேயே அவர் தமது சிசுவையும் அதனுள் பிரசவித்தார்

அவ் வைத்தியசாலையின் சிற்றூழியர்களும், கடமையிலிருந்த டாக்டர்களும் காட்டிய அசிரத்தையினலேயே அப்பெண்ணுக்கு இக்கதி நேர்ந்ததெனப் புகாரிடப்பட்டுள்ளது (கி)

# கப்பல் பயணிகள் தொகை அதிகரிப்பு

[மன்னர்]

தலைமன்னர் - ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இலங்கைக்கு வரும் இந்திய உல்லாசப் பயணிகளின் தொகை கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளது

கடந்த வெள்ளிக்கிழமை ராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னர் துறைக்கு வந்த கப்பலில் 842 பிரயாணிகள்பயணம் செய்தனர்.

இவர்களில் 150 பேர் இந்திய உல்லாச பயணிகளாகும்

இதே போல் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் செல்வோரின் தொகையும் அதிகரித்து வருகிறது

கடந்த சனிக்கிழமை தலைமன்னரிலிருந்து ராமேஸ்வரத்திற்குப் புறப்பட்ட கப்பலில் ஆயிரம் பிரயாணிகள் பயணம் செய்தனர்.

## 'ஒருநாட்டின் அபிவிருத்திக்கு பெண்களின்பங்கு அவசியம்'

### சிரேஷ்ட உதவி அரசஅதிபர்கருத்து

[அச்சுவேலி]

ஒரு நாட்டின் அபிவிருத்திக்குப் பெண்களின் பங்கு அவசியமானதாகும் இந்நோக்கைக் கொண்டுதான் இன்றைய உலகு செயல்பட்டுவருகிறது. நமது நாட்டிலும் 1978 ஆம் ஆண்டு மகளிர் பணியகம் நிறுவப்பட்டு இதன் மூலம் அரசு பெண்கள் அபிவிருத்தியில் முன்னின்று உழைக்கக் கூடிய பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்திவருகிறது.

இவ்வாறு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுவீடிஸ் நாட்டின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட மாதர்களுக்கான இரண்டாம் கட்டப் பயிற்சி ஆரம்ப வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய யாழ் செயலக சிரேஷ்ட உதவி அரசாங்க அதிபர் திரு கே. கோபலரத்தினம் கூறினர்

திரு. கோபாலரத்தினம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:- ''பொருளாதார நெருககடிமிக்க இக்காலகட்டத்தில் ஆணும், பெண்ணும் கூட்டாக உழைக்க வேண்டும். தலைமைத்துவப் பயிற்சி அறிந்து சுயதொழிலில் ஈடுபடச் செய்து முன்னணி மங்கையர்களை ஆக்குவதே இப்பயிற்சியின் நோக்கம். ஆகவே இப்பயிற்சி நெறியில் நீங்கள் கற்கும் கல்வியை உங்களுக்கு மட்டும் தான் என எண்ணி இருந்துவிடாதீர்கள். உங்களைப்போல் குறைந்தது பத்துப் பேரையாவது உருவாக்கி ஒருவளமான சமுதாயத்தை ஏற்படுத்த முன்னின்று உழைக்கவேண்டும்'' என்றூர்.

தலைமையுரையாற்றிய உதவி அரசாங்க அதிபர் திரு. குகிட்ணர் பேசுகையில் இப்பயிற்சி நெறிகசு மிகக் கஷ்டமான ஆனல் அரசு தரும் உதவியைக் கொண்டு சுயதொழிலை ஆரம்பிக்கக்கூடிய பெண்களையே தெரிவுசெய்துளோம். பயிற்சியின்போது ஒற்றுமையாகவும் ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் நடக்க வேண்டும். இதையொருசாதரண பயிற்சிநெறியாகக் கருதி

( •ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

இருளைப் பழிப்பதைவிட ஒரு விளக்கேற்றினுல் நல்லது. அது போலவே தீயதை குறித்துப் பேசுவதை விட ஒரு நற்செயலே மேலானது.

—ஓர் அறிஞர்

## நமதுநோக்கு

# 'சுவிஸ்' பிரச்னையும் பத்திரிகைப் புரளியும்

'அமெரிக்கப் பத்திரிகைச் சேவையைவிடச் சிறந்த சேவை உலகில் கிடையாதென்று பல வருடங்களாக நினைத்து வந்தேன். அங்கும் புரளி ஆரம்பித்துவிட்டது' என்கிறுர் பிரபல பத்திரிகையாளரும், பேராசிரியருமான ஜேம்ஸ் ஹப்வ்மன் (Huffman).

'நியூஸ் வீக்' என்ற சர்வதேச செய்திச் சஞ்சிகைக்கு அளித்த விசேட பேட்டியில் இவ்வாறு அவர் கூறியிருப்பது விசனத்திற்குரியது.

சுதந்திர அமெரிக்க பத்திரிகைச் சாதனம் இந்த நிலைக்கு இறங்குமானுல் பட்சபாதமற்ற செய்தியை நாமெங்கு படிக்கலாம்?

எந்த நாட்டிலும் இன்று இருவிதமான தகவல்கள் மக்களுக்குக் கிடைக்கின்றன. ஒன்று அரசாங்கம் வெளியிடும் உத்தியோக பூர்வமான செய்திகள்; மற்றது 'எல்லோருக்கும் தெரிந்த பகிரங்க இரகசியம்'.

இந்த இரு பிரிவுகளும் உண்மை நிலையை அறிய விரும்பும் பொதுமக்களின் மனத்தைக் குழப்பியடிக்கும் என்பதை விளக்கத் தேவையில்லை.

நெற்றிக் கண்ணைக் காட்டிலும் உண்மையை உரைக்கும் பிரபல அமெரிக்க செய்திப் பத்திரிகைகள் அந்த நிலையைத் தளர்த்துவதை பேராசிரியர் ஹப்வ்மன் ஆழமாக ஆராய்ந்திருக்கிறுர்.

'ஸயனிசம்' என்ருெரு நோய்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேம். அது மத்திய கிழக்கில் எவ்வித அழிவை ஏற்படுத்தியிருக்கிறதென்பது அகில உலகும் அறிந்தசெய்தி.

இவ்வித பெருநோய்அமெரிக்காவையும் பீடித்திருக்கிறதா? 'அமெரிக்கனிஸம்' தலையெடுப்பதாலுல் செய்திகள் திரிக்கப்படும். இவ்வித மாற்றம் பேட்டிக் கட்டுரையில் கண்டிக்கப்பட்டுள்ளது. சின்னது செருக்கடையுமானுல் பெரியது சும்மா விடுமா?

எந்தச் செய்தியிலும் அழகும் கன்னித்தன்மையும் கவர்ச்சியான அம்சங்கள்; அவற்றை மாசுபடுத்தாது புனிதமாக வழங்குவது பத்திரிகா - பதிவிரதா- தர்மம்; மிகப் பொறுப்பான, ஆனுல் மிகக் கடினமான பணி.

கற்பழிக்கும் சம்பவங்கள் மலிந்துவரும் சமூகங்களில் செய்திமாசுபடுவது தவிர்க்கமுடியாத துன்பமென்று முடிவுகட்டுவது சுலபம். பொதுஜன அபிப்பிராயம் இந்த இரு கேடுகளையும் களைவதில் சலிப்படைவது அபாயம்.

உதாரணமாக இலங்கைத் தமிழ் இளைஞர் பிரச்னை பல நாடுகளில் பிரஸ்தாபிக்கப்படுகிறது. இன்று சுவிஸ் நாட்டில் தஞ்சம் புகுந்த 1600 இளைஞர்கள் அகதிகளா? என்ற சந்தேகம் கிளம்பியுள்ளது.

எந்த நாடும் - சுவிஸ்நாடுதானும் - தங்குதடையின்றி வெளிநாட்டு அகதிகளுக்குப் புகலளிக்க முடியாது. எந்த நாட்டிலும் எழும் கலவரத்தைச் சாட்டாகவைத்து அதில் 'பலியானவர்கள்' என்று வேறு நாட்டில் தொழில்தேடும் பேர்வழிகள் என்றும் இருக்கத்தான் செய்யும்.

அது அவ்வாருக, இன்று 'இலங்கைக்குத் திரும்பினுல் தமிழ் இளைஞர்களுக்கு ஆபத்து' என்பதை நிரூபிக்கும் நிபந்தனை 'அகதிகளுக்கு விதிக்கப்பட்டுள்ளதென்பது செய்தி; விசரனை விசரென்று நிரூபிக்கவேண்டுமென்ற நிபந்தனை போன்றது.

உலகில் சுவிஸ்நாடு என்றுமே பக்கம்சாராது, எந்த யுத்தத்திலும் அகப்படாது. 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற கோட்பாட்டுக்கு எடுத்துக்காட்டாகபெருமை பெற்றிருக்கிறது.

இந்தப் பெருமையை ஒரு முதலீடாகக்கொண்டு அங்கு தப்பிஓடியிருக்கும் இளைஞர்கள் உண்மையில் அகதிகளா என்பதை நிதானமான அந்த அரசு முடிவு கட்டவிடவேண்டும்; இதில் பத்திரிகைப்புரளிக்கு எவ்வித இடமுமில்லை.

தமிழ் தாய்மார் நூற்றுக் கணக்கான தங்கள் இளம் பிள்ளைகள் இலங்கை அரசால் கைதுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து ஊர்வலம், மகஜர், மன்ருட்டம், உண்ணுவிரதம் என்ற பலவித தாய்மைக்குரிய வழிகளில் பிள்ளைகளைச்சிறை மீட்க முயல்கின்றனர்.

எந்தத் தமிழ் இளைஞனும் காலம் வருமுன் தலை நரைத்துவிட்டால்மயிருக்கு மை (dye) பூசுவதில்லை. அவ்வாறு செய்தால் சா (die) வென்ற அபாயத்தை வரவழைப்பதாகுமெனக் கருதுகிறுன்.

எனவே நாட்டைவிட்டு வெளியேறும் தமிழ் இளைஞர்களைப் பற்றி பெற்றேர் அதிகம் கவலைப்படுவதில்லை. யாழ்ப்பாணம் ஒரு மயான பூமி எனக்கருதி பலர் இலங்கையின் வெளியூர்களில் பாதுகாப்பாக வாழலாமென நினைக்கின்றனர். அவர்கள் வாழும் வசதி படைத்தவர்கள்.

சுவிஸ் அரசாங்கம் எடுத்த எடுப்பில் இந்த துரதிஷ்டவசமான உயிர்களை யமனுக்குப்பரிசாக வழங்கமாட்டாது. இயலுமானுல் வேறு நாடுகளின் உதவியையும் கோருமென்று சொல்லப்படுகிறது.

நாட்டின் இன்றைய நிலையில் இங்கு இவர்களுக்கு எவ்வித பாதுகாப்புமில்லையென்பதை நாம் பத்திரிகா தர்மத்தின்பெயரால் வெளியிடுகின்றேம்.

# ஐ. நா. வில் பேசப்படும் ஈழத்தமிழர் பிரச்னை

இப்போது நடைபெறுகின்ற ஐ. நா. பொதுச்சபை கூட்டத்தில் இலங்கையும் ஓரளவிற்கு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. கடந்தகாலக் கட்டங்களில் உலக விவகாரங்கள் பற்றிய விவாதங்களிலும் உரைகளிலும்கலந்து கொண்டு தனது ஆலோசனைகளைத் தெரிவித்து வந்த இலங்கை இம்முறை தனது நாட்டு விவகாரங்களைப் பற்றி எடுத்துக்கூறவும் தனது நாடுபற்றி வேறு நாடுகள் தெரிவிக்கும் கருத்துக்களுக்குப் பதில் சொல்லவும் வேண்டிய நிலையிலுள்ளது.

### எஸ். எம். ஜி

ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்துக்கு ஒவ்வொரு நாடும் விசேஷ தூதுக்குழுவை அனுப்புவது வழக்கம் நமது நாட்டிலிருந்து ஒரு சமயம் மறைந்த தலைவர் திரு ஜி.ஜி.பொன்னம்பலமும் இலங்கை தூதுக் குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இம்முறைஇலங்கைத் தூதுக் குழுவுக்குத் தலைமை தாங்கும் இலங்கையின் வெளி விவகார அமைச்சர் ஜனுப் ஏ ஸி.எஸ், ஹமீத் ஏற்கனவே ஐ. நா. சென்றுள்ளார். அவர் அங்கு ஆரம்ப உரையையும் நிகழ்த்தியிருக்கிறுர். இலங்கையிலிருந்து இம்முறை செல்லும் தூதுக் குழுவிற்கு உபதலைவராக கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சர் சிறில் மத்தியூ செல்கிறுர். இத் தூதுக்குழுவில் இடம் பெற்றுள்ள மற்றையோரில் பெரும்பாலானவர்கள் பல்வேறு மாவட்டங்களின் அமைச்சர்களாவார்கள் இந்தத் தூதுக்குழு தெரிவு செய்யப்பட்டுள்ள முறையைப் பார்க்கும் போது ஐ. நாவில் இலங்கையின் விவகாரம் எழுப்பப்பட்டால் அதற்குப் பதிலளிக்கவும் அல்லது இவ்விவகாரத்தை அங்கு கிளப்புவதற்கும் தயாராக இக்குழு அனுப்பப்படுகிறதென்றே தோன்றுகிறது.

### ஐ. நாவில் தமிழர் பிரச்னை

இலங்கைத் தமிழர் பிரச்னையை ஐ. நாவுக்கு எடுத்துச் செல்லவேண்டும் என்று கடந்த பல வருடங்களிலும் இலங்கை தமிழர் குரல்எழுப்பி வந்தனர். ஆனுலும் 'உள்நாட்டு விவகாரமான' இலங்கைத் தமிழர் பிரச்னையை ஐ நாவில் எழுப்புவதற்கு இதுவரை எந்த நாடும் முன்வரவில்லை. சமீபத்தில் தமிழ்நாட்டில் அரசியல் தலைவர்கள் சிலர் இலங்கைத் தமிழர் பிரச்னையை ஐ. நா. வில் எழுப்ப வேண்டும் என்று இந்திய மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்தனர். இதற்கும் கூட இந்திய மத்திய அரசிடமிருந்து சரியான பதில் கிடைக்கவில்லை.

'சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி' என்பது போல் ஐ. நா பொது கூட்டத்தில் சர்வதேச நிலைமை பற்றிய பொது விவாதத்தில் இலங்கைவெளிவிவகார அமைச்சர் ஜனுப் ஏ ஸி எஸ் ஹமீத் கலந்துகொண்டுஆற்றிய உரையில் இலங்கையில் தமிழ்ப் பயங்கரவாதிகளுக்கு முக்கியத்துவமளித்திருந்தார். தமிழ்ப் பயங்கரவாதிகளால் இலங்கையின் உறுதிப்பாட்டுக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகத்தெரிவித்த இலங்கை வெளி விவகார அமைச்சர் சர்வகட்சி மாநாட்டின் மூலம் இப்பிரச்னைக்குத் தீர்வு காண இலங்கை ஜனதிபதி முயன்றுகொண்டிருப்பதாகவும் அறிவித்தார்.

ஆனுல் இப்பிரச்னையை ஜனுப் ஹமீத் எடுத்துக் கூறிய போது வெளிநாட்டு மண்ணில் தமிழ் பயங்கரவாதிகள் அடைக்கலமும் பயிற்சியும் பெறுகிறுர்களென்று குறிப்பிட்டார். இலங்கை வெளி நாட்டமைச்சர் எந்த நாட்டையும் இதுசம்பந்தமாகப் பெயர் குறிப்பிடாவிட்டாலும் இலங்கையில் பிரதமர் முதல் இலங்

[5ம் பக்கம் பார்க்க]

# அத்துளு அம்பாளும் நவராத்திரி விழாவும்

வட இலங்கையில் வரலாற்றுப் புகழ்மிக்கதான வடமராட்சியின்கண் கீழ்க்கரவையம் பதியிலே தான் தோன்றித் தெய்வமாகத் தோன்றியவர் கரவை அத்துளு அம்மன். இத்தெய்வத்தினைக் கண்ணகை அம்மன் என்றே கரவையம்பதி மக்கள் அழைப்பர்.

நாற்புறமும் பச்சைப் பட்டாடை போர்த்த நெல்வயல் அதன் நடுவே குன்றுகள் தாமரைக் குளம் என்பன விளங்க, வயற்பகுதியை மெருகூட்டுவதற்கு நெருங்கிய குடிகள் இடையில்சூழ அதின் நடுவில் குமிழ்- மகிழ்- கடம்பம் வேப்பம் ஆகிய பலவகை நிழல் மரங்களும் இம்மரங்கள் தெகிழ்; வவுல் ஒட்டி, சிங்கிலி குறிஞ்சா. சூரை, தவிட்டை முதலிய கொடிகள் படர்ந்து மூடிமறைக்கின்ற சோலையின்நடுவே இயற்கை அரணை உருவாக்கி அத்துளு அம்மன் வீற்றிருக்கின்ருள்.

இற்றைக்கு இருநூறுஆண்டு காலமாக சிறுகுடிலில் வீற்றிருந்த அம்மனுக்கு இன்று ஒரு கட்டிடம் கட்டி ஆலயம் அமைத்துள்ளனர். இயற்கைத் தெய்வமானஅம்மனுக்குஆடம்பரமாக எதுவும் அமைக்கப்படவில்லை. இவ்அம்மனுக்கு ஆடம்பரதிருவிழா எடுப்பதில்லை. சோமவாரமும் நவராத்திரியுமே இங்கு எடுக்கப்படும் திருவிழாக்களாகும்.

### சி. இந்திரா

இவ்வம்பிகைபற்றிய கர்ணபரம்பரை வரலாறு புதுமையானது பெண்வடிவில் தோன்றிய அம்மன் அளவெட்டி எனும் ஊரிலிருந்து கரவெட்டியை நோக்கி வந்த முருகர் என்னும் ஞானியாரை இடைநிறுத்தி தன்னை இப்பற்றைக்குள் வைத்து ஆதரிக்கும்படி வேண்டினுர். பின் அக்காலத்தில் கரவையம் பதியில் வசித்த நற்குடும்பத்தலைவன் ஒருவனது கனவில் தோன்றி தன்னை ஆதரிக்கும்படி கூறி மறைந்ததாகவும் பின் அக்குடும்பத்தினர்முருகஞானியின் பூஜையில் அம்மனை ஆதரித்து வந்தனர். இயற்கை எழிலும் அமைதியும் எளிமையுமுடைய இக்கரவையூரை மதுரை மீனுட்சி அம்மன் தனக்குரிய இடமாக்கியுள்ளார்எனக் கூறுவாரும் உளர்.

அத்துளு அம்மனை கண்ணகை என அழைத்திடினும்- சக்திவடிவில்- தாய்வடிவிலேயே வணங்கி வருகின்றேம். கடவுளை பிதா என்றும் பிள்ளையென்றும் ஆண்டாள் என்றும் அண்ணல் என்றும் நாயகன் என்றும். அழைக்கின்றேம். இவையாவற்றிலும் தாய்வடிவில் ஆண்டவனை வழிபடுவதே தலமாகும், தாயானவள் தீதே செய்திடினும் தாழ்மையுற்றிடினும் தன் மகனைக் கைவிடமாட்டாள். தாயே

(5-ம் பக்கம் பார்க்க)

அழகிய சொக்கநாதபிள்ளை பாடிய

### சரஸ்வதிதோத்திரம்

மேவினிய பேரமுதின் மிக்கான வாக்குநல்கும்
பூவினர சாட்சி பொருந்தநல்கும்—நாவினிடத்
தாள்கமலத் தாள் அபயத்தாள் வரதத்தாள் எகினத்
தாள் வெண்ணிறத் தாள்கனகத்தாள்.

(கனகத்தாள் = பொன்முடிதரித்தவள்)

### "பாரதியின் பாட்டுணர்வை நனவாக்குவோம்"

பள்ளித் தலமனைத்தும் கோயில்செய்குவோம்—என்ற
பாரதியின் பாட்டுணர்வை நனவாக்குவோம்
வெள்ளைக் கலையுடுத்த கலையின்தெய்வத்தை—நிதம்
வீற்றிருக்கச் செய்துபதம் போற்றிமகிழ்வோம்

''கல்விப் பெருஞ்செல்வப் பேறு''பெறுவோம்—அவள்
கருணைமிகப் பெற்றறிவைக் கனிவாக்குவோம்
நல்கிப் பலவித்தை நாம்பயிலுவோம்—எங்கள்
நாடுயரப் பேதமின்றி ஒன்றுசேருவோம்

செல்வத் திருமகளைச் சிந்தைசெய்குவோம்—வாழ்வு
சீருயர்ந்து ஊர்புகழும் திறன் கூட்டுவோம்
பல்கிப் பயிர்செழிக்கப் பயன்பெருக்குவோம்—பூமி
பசுமைபெற உரிமையுடன் பெருமைநாட்டுவோம்

வெற்றித் திருமகளைப் பற்றிப் பணிவோம்—உரம்
வேண்டிநலம் நீண்டபணி பூண்டுவாழுவோம்
சுற்றித் துரத்தும்துயர் தூரஓட்டுவோம்—மனத்
தூய்மையுடன் ஞானத்தீயில் வேகமூட்டுவோம்

கவிஞர்

நா. க. சண்முகநாதபிள்ளை

# திருட்டை அம்பலப்படுத்திய நித்திரை மயக்கம்!

[மாவிட்டபுரம்]

நித்திரை மயக்கம் திருட்டுப் பேர்வழி ஒருவரின் குட்டை அம்பலப்படுத்தியது!

வலி. வடக்குப் பகுதியில் பல காலமாகச் சிறு சிறு திருட்டுக்களில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் திருட்டுப் பேர்வழி ஒருவர் மாவிட்டபுரத்தை யடுத்த பளை என்னுமிடத்தில் இரவு நேரம் மரவள்ளித் தோட்டமொன்றில் புகுந்து கிழங்குகளைத் திருடிய பின்னர் அத்தோட்டத்திற்கு அருகிலிருந்த புகையிரத நிலைய மண்டபத்தில் கிழங்கு மூடையுடன் அயர்ந்து தூங்கிவிட்டாராம்!

அதிகாலை இவரையும் மூடையையும் கண்ணுற்ற பொதுமக்கள் இவரைப் பிடித்து விசாரிக்கவே இவரது குட்டு வெளிப்பட்டது! ஆசாமி நையப்புடைக்கப்பட்டு எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டார்!

# கிளிநொச்சி செய்திகள்

கே. வி. கே. திருலோகமூர்த்தி

## அபிவிருத்தியில் பின்னடைந்த கிராமம்

கிளிநொச்சி மாவட்டத்தில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட பழைய கொலனி எனப்படும் கணேசபுரம் கிராமம் அபிவிருத்தியில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்து வருவது கவலைக்குரியதாகும் இக்கிராமத்திற்கு பின் உதயமாகிய பகுதிகள் துரிதகெதியில் வளர்ச்சியடையும் போது இக்கிராமம் ஆரம்பிக்கப்பட்ட நிலையிலே இன்றும் இருக்கிறது இந்நிலைக்கு விரைவில் மாறுதல் வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி கணேசபுரம் கிராம முன்னேற்ற சங்க புனரமைப்புக் கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் கிளிநொச்சிப் பகுதி விஷேட சேவை அலுவலர் எம் தர்மபாலன் குறிப்பிட்டார்.

## குளாய்க் கிணறுகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவுகின்ற குடிநீர் தட்டுப்பாட்டை நீக்குமுகமாக பல கிராமங்களில் குளாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அபிவிருத்திக்குப் பொறுப்பான உதவிஅரசாங்க அதிபர் கே. குணராசா எடுத்துக் கொண்ட துரித நடவடிக்கை காரணமாக கிராமங்கள் தோறும் குளாய்கிணறுகள் அமைக்கும் முயற்சி தீவிரப் படுத்தப்பட்டுள்ளது.

குளாய்க்கிணறுகளை றெட்ப்பாஞ நிறுவனத்தினர் அமைத்து வருகின்றனர். இவர்களுக்கு வேண்டிய உதவிகளை கிராமசேவை அலுவலர்களும் விசேடசேவை அலுவலர்களும் செய்துவருகின்றனர்.

## பாராட்டு

கிராமிய மக்கள் தமது வாழ்வை வளம்படுத்திக்கொள்ளவும், உணவில் தன்நிறைவு காணவும் வீட்டுத்தோட்டம் கால்நடைவளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்ற துறைகளில் ஈடுபடவேண்டும். இவ்வாறான துறைகளில் மக்களுக்கு போதியபயிற்சியையும் ஊக்கத்தையும் அளிக்கமுன்வந்த சராச்சிலயன்ஸ் கழகத்தினரை வெகுவாகப் பாராட்டுகிறேன்.

இவ்வாறு கரச்சிலயன்ஸ் கழகத்தால் நடத்தப்பட்ட விவசாய போதனுவகுப்பின் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சிவகுப்பை ஆரம்பித்து வைத்து சிறப்புரையாற்றுகையில் கிளிநொச்சிமாவட்ட மிருகவைத்திய அதிகாரியும் பால் உற்பத்தி விற்பனயாளர் கூட்டுறவுச்சங்க தலைவருமான டாக்டர் எஸ். கந்தசாமி குறிப்பிட்டார்.

## பொதுக் கூட்டம்

கிளிநொச்சி நகர அருள்மிகு முருகன் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 10 - ம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது. கூட்டத்திற்கான ஏற்பாடுகளை பரிபாலனசபை செயலாளர் திரு எம். நடராசா செய்துள்ளார்.

## தமிழ் மொழியில் ஆர்வம் இல்லை

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவருக்கு தமிழ் மொழியில் ஆர்வம் குன்றிவருகிறது. முன்பெல்லாம் கணித. விஞ்ஞான பாடங்களில் ஆர்வமும் அறிவுமற்றிருந்த இப் பகுதி மாணவர்கள் இன்று தமது தாய்மொழியான தமிழ் மொழியில் ஆர்வம் குன்றி வருவது மிகுந்த கவலையையும் அதிர்ச்சியையும் தருகிறது.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட பாடசாலைமாணவர்களின் தமிழ்த்தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் கல்விப் பணிப்பாளர் ஜனுப்.எம்.எம். மன்சூர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு கல்வி அதிகாரி கே.சோமசுந்தரம் தலைமை வகித்தார்.

## சிரமதானம்

உருத்திரபுரம் சிரமதான சபையினரின் ஆறுவது சிரமதான வைபவம் உருத்திரபுரம் கிழக்கு இரத்தினம் பண்ணை தெற்கு வீதியை சிரமதான மூலம புனரமைக்கும் முயற்சியுடன் ஆரம்பமாகியது.

சிரமதானவைபவத்திற்குதிரு கே,நாகலிங்கம் தலைமைவகித்தார். உருத்திரபுரம் கிழக்கு கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. ஆ.செல்வத்துரை சிரமதானத்தை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். பெருந்தொகையானோர் சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

# மானம்பூ உற்சவம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் ஆலய மானம்பூ உற்சவம் இன்று நடைபெறவுள்ளது. இவ்வாலயத்தின் சுவாமி பிற்பகல் 2.30மணிக்கு எழுந்தருளி 3-30 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர ஆலயத்தைச் சென்றடைந்து அங்கு மானம்பூ உற்சவம்இடம்பெறும்.

# ஐ. நா. வில்...

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

கைப் பத்திரிகைகள் பலவும் எந்த நாட்டை குற்றஞ்சாட்டி வருகின்றன என்பதும்இலங்கை உயர் தலைவர்கள் வெளிநாட்டு பத்திரிகைகளுக்கு அளித்து வரும் பேட்டிகளில் தெரிவித்து வரும் கருத்துக்களும் உலகறிந்த விஷயம்.

எனவே இக்கூற்று இந்தியாவை உடனடியாகவே பதிலளிக்க வைத்து விட்டது.

சென்றவருடம் ஜூலை மாதம் இலங்கையில் நடந்த இனக் கலவரத்தைத் தொடர்ந்து நாற்பதிஞயிரத்துக்குமதிகமான தமிழர்கள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாக வந்துள்ளார்கள் என்று இந்திய பிரதி வெளிவிவகார அமைச்சர் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

அகதிகள் பிரச்னை வெறும் பிரச்சினையல்ல கிழக்குப்பாகிஸ்தானிலிருந்து பெருந் தொகையான அகதிகள் இந்தியாவில் தஞ்சம் புகுந்து இந்தியாவுக்கே அது ஒரு பெரும் தலையிடியாக அமைந்ததைத் தொடர்தேபங்களாதேஷ் உருவான தென்பது உலக சரித்திரம்!

## ஐ. நா வில் பார்த்தசாரதி

இலங்கையின் இனப்பிரச்னை பற்றி ஐ நா.வில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் எழுப்பியதால்தான் இந்தியா இப்பிரச்னை பற்றி ஐ. நாவில் எடுத்துக் கூறுவதற்குச் சந்தர்ப்பமேற்பட்டது.

இலங்கை இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு இலங்கை ஜனுதிபதி சர்வகட்சி மாநாடு மூலம் முயற்சி செய்கின்றார் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுப் பேசிய போது இப்பிரச்னையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு இந்தியா எடுத்துக் கொண்ட முயற்சிகளைச் சொல்லத்தவறிவிட்டார். சர்வகட்சி மாநாடு உருவாவதற்காக இலங்கைக்கு இந்தியப் பிரதமரின் சிறப்புத் தூதராக திரு. கோபாலசாமி பார்த்தசாரதி மூன்று தடவைகள் வந்து பல தலைவர்களையும் சந்தித்துப் பேசி எடுத்த முயற்சிகளை மறந்துவிடமுடியுமா? இதே பார்த்தசாரதி இப்பொழுது ஐ. நா.வில்தான் இந்தியக் குழுவில் ஒருவராக இருக்கின்றார் ஜனுப் ஏ. ஸி எஸ். ஹமீத் ஐ. நா.வில் உரையாற்றியபின் பின் திரு. பார்த்தசாரதி அவரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். ஐ. நா. விவகாரங்களில் திரு சாரதி ஊறித்திளைத்த பழுத்த அனுபவசாலி!

எப்படியோ இலங்கையின் உள்நாட்டு விவகாரமான தமிழர் பிரச்னை இன்று உலக அரங்கமாகிய ஐக்கிய நாடுகள் சபைக்கு வந்து விட்டது.

## லண்டன் டைம்ஸில் ஜனுதிபதியின் பேட்டி

இலங்கைத் தமிழர் பிரச்னை ஐ. நா. சபையில் எழுப்பப்பட்டுள்ள சமயத்தில் இலங்கை ஜனுதிபதி ஜே. ஆர், ஜயவர்த்தன 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்துள்ள ஒரு பேட்டியில் இலங்கையில் இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காகத் தாம் சமர்ப்பித்துள்ள திட்டத்தை யார் ஆதரித்தாலும் யார் எதிர்த்தாலும் செயல்படுத்தப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்.

ஒன்பது மாதங்கள் கடந்த பின்தான் இந்த முடிவுக்கு ஜனுதிபதி வந்திருக்கிறார். கடந்த ஜூலைக் கலவரத்தின் பின்னராவது ஒருவழி கண்டிருக்கலாம். இப்பொழுது தனது திட்டத்தை எவரைப்பற்றியும் கவலைப்படாமல் செயல்படுத்தப் போவதாகக் கூறியிருப்பதன் அர்த்தம் என்னவாயிருக்கும்? எந்த நிலைமையையும் சமாளிப்பதற்கான தயார் நிலையில் தாம் இருப்பதாகக் கருதுகிறாரோ?

எந்தநாடு எம்மீது படையெடுத்தாலும் அதை எதிர்த்துப் பதிலடிகொடுப்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஒருவைபவத்தில் பேசியிருப்பதற்கு இதுதான் காரணமோ?

படைபலமும் இராணுவத் தீர்வைப் பின்னணியாகக் கொண்ட எந்தத் திட்டமும் எந்தப் பிரச்னைக்கும் நிரந்தரமான அமைதித் தீர்வைப் பெற்றுத்தரமாட்டாது. இது உலக வரலாறு கற்பிக்கும் பாடம்.

# மனேன்மணி அம்பாள் ஆலயத்தில் இன்று மானம்பூ

[கொக்குவில்]

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனேன்மணி அம்பாள் ஆலயத்தில் இன்று மாலை வழமையான வீதிவழியாக கிராமப் பிறதெட்ஷண திரு உலா நடைபெற்று மானம்பூ உற்சவம் நடைபெறும். இதனைத் தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகமும் விசேட தீபாராதனையும் இடம்பெறும்.

# கலட்டிஅம்மன் ஆலயத்தில் லட்சார்ச்சனை

[யாழ்ப்பாணம்]

யாழ் வண்ணார்ப்பண்ணை கிழக்கு, கலட்டி எச்சாட்டி அருள்மிகு மகாமாரி அம்மன் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை முதல் இம்மாதம் 24ம் திகதி வரை அம்பிகைக்கு தினமும் மாலை விசேட அபிஷேகமும். லட்சார்ச்சனையும், ஸ்ரீ சக்கர பூசையும் நடைபெறும்.

# அத்துளு...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

அல்லும்பகலும் தன்பிள்ளைக்காக அயராது பாடுபடுகின்ருள். தனது பிராணனையும் பொருட்படுத்தாது மக்களாகிய எம்மை உருவாக்கி வளர்க்கின்ருள். தன் இரத்தத்தையே எமக்கு உணவாகத் தந்து எம்மை உலவவிடுகின்ருர். இத்தகைய தன்மையுடையதாகத் தாய்த் தெய்வத்திற்கு எடுக்கும் விழாவே, சுலபமாகத் தெய்வக்கருணையைக் கிடைக்கச் செய்யும்.

அந்தக் கடைக்கண் அருளினுல் இன்று கல்வியில் பெரியோர் நிறைந்து விளங்கும் கிராமமாக கரவெட்டி திகழ்கின்றது என்பதில் ஐயமில்லை.

இவ்வாலயத்தில் நவராத்திரி நாட்களில் இரவு வேளையிலேயே நவராத்திரி பூஜை நடைபெறும். கரவையம்பதி மக்களில் படிக்கும்சிருர் தொட்டு முதியோர் வரை நாள் முழுவதும் உபவாசம் இருந்து தீபாராதனை கண்ட பின்பே பால் பழம் அருந்தும் முறையில் விரதமனுஸ்டிப்பர். இவ்வாலயத்தில் பூஜை வேளையில் பக்தியின் உச்சக்கட்டத்தைக்காணலாம். அம்மன் அருள் பெற்ற மக்கள் உபவாசம் இருந்து மாலையில் ஆலயத்தில் படிக்கப்படும் கண்ணகி புராணத்தைக் கேட்டு பின் தீபாராதனை கண்டு பிரசாதம் வாங்கிச் செல்லும் காட்சி உருக்காத உள்ளத்தையும் உருகவைப்பதாக இருக்கும்.

# சரஸ்வதிபூசை

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாநகரசபை கொழும்புத்துறை உபமின் நிலையத்தில் (இன்று) சரஸ்வதிபூசை நடைபெறவிருக்கிறது.

★

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீ வாலை அம்மன்ஆலயத்தில் விஜயதசமி விழாக் கொண்டாடவுள்ளனர் இவ் விழாவிற்கு திரு. சொக்கலிங்கம் [சொக்கன்] தலைமை தாங்குகிறார். பிரதவிருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் கலந்து கொண்டு மன்றத்தினரின் அப்பியாசப் புத்தகத்தை வெளியிட்டுவைப்பார்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ வீ கே. சிவஞானம், தொழிலதிபர் திரு. க. கனகராசா ஆகியோர் சிறப்புப் பிரதிகளைப் பெறுவர்.

# உண்ணாவிரதத்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டு, உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கோருவதென்று முடிவு செய்யப்பட்டது இதைத் தொடர்ந்தே சங்கச் செயலாளரும் உறுப்பினர்களும், உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கோரினுர்கள் [க]

# நிலவரைபடங்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கத்திலும் நேற்று முன்தினமிரவு இனந்தெரியாத ஏழு இளைஞர்களினுல் நிலவரைபடங்கள் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

# போலித்துப்பாக்கி-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஊழியர்கள், அவர்களை எதிர்த்து போராடினுர்கள் இதனுல் கொள்ளையடிக்க வந்தவர்கள் பின்வாங்கினுர்கள்.

சாசாளரிடம் துப்பாக்கி முனையில் இளைஞர் ஒருவர் 18,000 ரூபாவை கொள்ளையடித்த போது அங்கு நின்ற பாவனையாளர் ஒருவர் அந்த இளைஞரிடமிருந்து பணத்தை மீட்டு சங்கத்தில் ஒப்படைத்தார்

இளைஞர் ஒருவரை தலைவர் மடக்கிப்பிடித்ததும் மற்றும் நால்வரும் வானை நோக்கிஓட ஊழியர் துரத்திச் சென்றனர். சாரதிவானை இயக்க ஆரம்பித்த போது ஊழியர் ஒருவர் கொட்டனுல் வான் கண்ணுடியை அடித்து நொருக்கவே கண்ணுடி துண்டுகள் சாரதியின் கண்களுக்குள் சென்று அவர் கஷ்டத்திற்குள்ளானுர்.

ஆறு இளைஞர்களும் அங்கிருந்து தப்பிச் சென்ற போது சங்க லொறியில் சுமார் 20 ஊழியர் துரத்தி சென்று வழியில் இளைஞர்களை மடக்கிபிடித்து கொண்டு வந்தனர். வரும் வழியில் இயக்கமொன்றை சேர்ந்தவர்கள் என்று கூறிவந்த இளைஞர்கள் அவர்களை விசாரணைக்கு கூட்டிச் சென்ருர்கள்.

அப்பகுதி பொதுமக்கள் சங்க ஊழியர்களை பாராட்டினுர்கள்.


## கண்ணீர் அஞ்சலி

### திரு. M. சின்னத்துரை

(இளைப்பாறிய கட்டிடத்திணைக்கள இயக்குநர்; ஆலோசனைப் பொறியியலாளர் மனேகரன் and வெற்றிவேல்)

எமது ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்குத் தமது உடல் நலத்தையும் பொருட்படுத்தாது அயராது உழைத்த பெரியார் திரு. சின்னத்துரை அவர்களின் திடீர் மறைவை கேட்டு நெஞ்சம் விம்முகிறோம். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனேகரன் & வெற்றிவேல்

53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

41

## இளைஞர், யுவதிகள் ஆற்றலை வளர்க்க
# கிராமரீதியான தொழில் பயிற்சிநிலையங்கள் தேவை!

(மாவிட்டபுரம்)

''யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இதுவரை 14 தொழிற்பயிற்சி நிலையங்களே இயங்கிவருகின்றன. ஏனையமாவட்டங்களுடன் ஒப்பிடும்போது இவை போதுமானதல்ல. குறைந்தது 28 தொழிற்பயிற்சி நிலையங்களாவது இம் மாவட்டங்களில் இயங்க வேண்டும். ஆகவே இது விடயத்தில் பொதுநல நோக்குடைய இயக்கங்கள் அக்கறை காட்டவேண்டும். கிராமரீதியாக பல்வேறு தொழிற்பயிற்சி நிலையங்களை தொழில்திணைக்கள அனுசரணையுடன் ஏற்படுத்தி இளைஞர்கள், யுவதிகளின் சுயஆற்றலை வளர்க்க இவ்வியக்கங்கள் முன்வரவேண்டும்.

இவ்வாறு காங்கேசன்துறையில் தொழில்திணைக்களத்தின் ஆதரவிலான தையல்தொழில் பயிற்சி நிலையமொன்றை சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்து உரையாற்றிய யாழ். தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் திரு என். சி. இராசநாயகம் கூறினார்.

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் வைபவத்திற்கு தொழில் திணைக்கள உத்தியோகத்தர் திரு ஆ. பசுபதி தலைமைவகித்தார்.

உதவிஆணையாளர் தொடர்ந்துபேசுகையில்கூறியதாவது:- தொழில்திணைக்களம் முன்னர் போலன்றி இன்று பல்வேறு பொறுப்புக்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. 1931ம் ஆண்டு தொழில்திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டபோது 4,5 தொழில் சட்டங்களே நடைமுறையில் இருந்தன. ஆனுல் இன்று 69 சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அவற்றை செயல்படுத்துவதிலும் கண்காணிப்பதிலும் எமது திணைக்களம் ஈடுபட்டு வருகிறது. தனியொரு அமைச்சின் கீழ்இயங்கும் ஒரே திணைக்களம் தொழில் திணைக்களமாகும். தலைமையகத்தில் ஓர் ஆணையாளரும் நாடுபூராவும் 12 பிரதிதொழில் ஆணையாளர்கள் 50க்குமேற்பட்ட உதவி தொழில் ஆணையாளர்கள் 200க்கும் மேற்பட்ட தொழில் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கடமையாற்றி வருகிருர்கள்'' என்ருர்

தொழில் உத்தியோகத்தர் திரு ஆ பசுபதி தலைமையுரை நிகழ்த்திஞர் மற்றும் நடிகமணி வி. வி. வைரமுத்து, தையல் போதனுசிரியை திருமதி அன்ரனி திரு. பூ. இரத்தினம் ஆகியோரும் பேசினார். திரு. அ ரஞ்சன் இறுதியில் நன்றி கூறினுர்.

---

## பளுகாமம் வங்கிக்கொள்ளை:
# பிள்ளை குட்டிக்காரன்; என்னை விட்டுவிடுங்கள்!
## இப்படிக்கூறியதாகச் சாட்சியம்

[கொழும்பு]

''நான் பிள்ளைகுட்டிக்காரன் என்னை விட்டுவிடுங்கள் வேண்டுமானுல் காரை எடுத்துப் போங்கள் என்று எனதுகாரை வாடகைக்கு அமர்த்தி எனது வாயிலும், கண்களிலும் பிளாஸ்டர் ஒட்டியவர்களிடம் கூறினேன்''

இவ்வாறுபளுகாமம் இலங்கை வங்கிக்கொள்ளை வழக்கில் சாட்சியமளித்த காத்தான் குடியைச்சேர்ந்த பக்கீர்தம்பி சீனி முகம்மது எதிரி தரப்பு சட்டத்தரணி ஜனுப் ரவூப் ஹக்கீம் குறுக்கு விசாரணை செய்தபோது கூறினுர்.

அரசு தரப்பு சாட்சியான கொள்ளைக்குப் பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் காரின் சாரதியான சீனிமுகம்மது மேலும் கூறியதாவது;-

எனது காரை வாடகைக்கு அமர்த்தியவர்கள் 'பிளுன்ஸ் கம்பனி'யைச் சேர்ந்தவர்கள் என எண்ணிய நான் அவர்களிடம் ''இது பிளுன்ஸ் கார் அல்ல. இதனை விட்டு விடுங்கள்'' என்றேன்.

அவர்கள் 'பிளுன்ஸ் கம்பனி ஆட்கள் என்றே முதலில் நான் நினைத்ததாக பொலிசாருக்கு சாட்சியமளித்துள்ளதாக நான் கூறவில்லை.

முன் ஆசனத்திலிருந்து பின் ஆசனத்திற்கு இழுத்துப்போடு முன்னர எனது கண்களிலும் வாயிலும் பிளாஸ்டரை ஒட்டினர்கள். பின் ஆசனத்தில் இழுத்துப் போட்ட பின்னர் முதலாவது எதிரி சாரதி ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

முதலாவது எதிரி சாரதி ஆசனத்தில் வந்தமர்ந்ததை என்னைபின்னுக்கு இழுக்கும் போது எனது கண்களால் பார்த்தேன். வேறு எவரும் வெளியிலிருந்து வந்து அந்த ஆசனத்தில் அமர்ந்திருக்கமுடியாது ஏனெனில் கதவுதிறந்து மூடும் சத்தம்கேட்கவில்லை.

கொள்ளைச் சம்பவத்தின்பின் பொலிசார் இரு தடவைகள் எனது வாக்குமூலத்தைப்பதிவு செய்தபோதிலும் அந்தவாக்கு மூலங்களை எனக்கு வாசித்துக் காட்டவில்லை.

பலசட்டங்களில் சாட்சி பொலிசாருக்கு அளித்த வாக்கு மூலத்திற்கும் நீதிமன்றத்தில் கூறுவதற்கும் முரண்பாடுகள் இருப்பதாக சட்டத்தரணி ஜனுப் ரவூப் ஹக்கீம் நீதிபதியின் கவனத்திற்குக்கொண்டு வந்தார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

---

## இ.த.ஆ.சங்க பரந்தன் கிளை கூடுகிறது

[கிளிநொச்சி]

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பரந்தன் கிளையின் வருடாந்தப்பொதுக் கூட்டம் எதிர்வரும் 6ம் திகதி சனிக்கிழமை காலை 10மணிக்கு பரந்தன் இந்து தமிழ்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது

இக் கூட்டத்திற்குப் பிரதம விருந்தினராக வட்டாரக்கல்வி அதிகாரி திரு மா. சண்முகநாதன் அழைக்கப்பட்டுள்ளார் சிறப்பு விருந்தினராக சங்கப்பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம், நிதிச்செயலாளர் திரு நா. சோதிநாதன் நிருவாகச் செயலாளர் திரு த.அருணகிரிநாசா யாழ். மாவட்ட செயலாளர் திரு வி எஸ் சிவபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

---

## எரிந்த கடைகளை திருத்தத்தடை

(மன்னுர்)

மன்னுரில் எரிக்கப் பட்ட கடைகளை புதுப்பித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

இத் தடை உத்தரவை மீறி எரிந்த கடைகளைப் புதுப்பித்தால் அவை உடைக்கப்படும் என்று கூறும் அறிவித்தல் ஒன்று எரிந்த சகல கடை உரிமையாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

---

# செய்திச் சிதறல்

## திருட்டு

(கோண்டாவில்)

நள்ளிரவில் கடையை உடைத்து உட்புகுந்த திருடர்கள் சுமார் 7500 ரூபா பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் யாழ்ப்பாணம் பழைய சந்தையில் உள்ள கடையில் நடைபெற்றுள்ளது.

இதுபற்றி திரு. க. சோமசுந்தரம் யாழ்ப்பாணம் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

## சுகாதாரவாழ்வு அவசியம்

(கோண்டவில்)

''மனிதர்களிடையே சீரான வாழ்வு காணப்படவேண்டுமானுல் சுகாதாரமான வாழ்க்கை மிகமுக்கியமாகும்.''

மேற்கண்டவாறு சுகாதாரக் கல்வியதிகாரி திரு. வைத்தீஸ்வரன், திருநெல்வேலி பிரிவுக்கான சுகாதாரக் குழுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

கலாசாலை மண்டபத்தில் சிறினிவாசன் தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் சுகாதாரபரிசோதகர் சி. குமாரசாமி, விசேட சேவைஅலுவலர் நா. நவரத்தினராசா, பொது சௌக்கிய மாது திருமதி பத்மினி ஆனந்த நடராசா, திரு. இ சுவாமிநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

## துரதிர்ஸ்டசாலி

(ஊரெழு)

சமயாசமய அடிப்படையில் கடமையாற்றி வந்த ஒருவர் தனக்கு நிரந்தர நியமனம் கிடைக்கவிருக்கும் மகிழ்ச்சிகரமான செய்தியை அறிந்து கொள்வதற்கு முன்னரே அவரை காலன் கவர்ந்து சென்றுவிட்டான்.

அண்மையில் தனியார் பஸ் ஒன்றில் வந்துகொண்டிருந்த பொழுது வவனியாவில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தவர்களுள் ஒருவரான எம் எஸ். பரமானந்தன் என்பவரே அந்த நல்ல செய்தியை அறிந்து கொள்ள முடியாத துரதிர்ஸ்டசாலியாவார்.

காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவனத்தில் பாதுகாப்புச்சேவை ஊழியராகக் கடமையாற்றிவந்த அவருக்கு அக்டோபர் மாதத்திலிருந்து நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது என்றவிபரம் அதன் தலைமைப்பீடத்தால் கடந்தவாரம் வெளியிடப்பட்டது.

## படகுசேவை நிறுத்தம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு— குறிகாட்டுவான் பிரயாணிகள் இரண்டாவது படகுச்சேவை மீண்டும் நிறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வந்து அவசிய கருமமாற்றிச் செல்பவர்கள் இச்சேவையால் பாதிப்படைந்துள்னர்

இப்படகுத் துண்டிப்பால் பிரயாணிகள் மாலைவரை மூன்ருவது சேவைக்குக் காத்திருக்க வேண்டியுள்ளது

## ''விஞ்ஞானத்தின் உதவி''

(மன்ஞர்)

''அன்று இருக்க இடமின்றி கால்நடையாகப் பயணம் செய்த மக்கள் இன்று வான் முட்டும் கட்டிடங்களை இருப்பிமாகக் கொண்டு வானத்தில் சொகுசாகப் பயணம் செய்வதற்கு உதவியது விஞ்ஞானம்''

இவ்வாறு மன்ஞர் புனித சவேரியார் ஆண்கள் மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் விஞ்ஞான கழகக் கூட்டத்தில் உரையாற்றிய ஆசிரியர் திரு. கஜிணபார் தெரிவித்தார்

இக்கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் விஞ்ஞான கழகத் தலைவர் செல்வன் என். சி. ரி. குரூஸ் தலைமையில் நடைபெற்றது.

## நீர்விநியோகம் சீர்கேடு

(மன்ஞர்)

தலைமன்ஞர்துறை சுங்க அதிகாரிகள் விடுதிக்கான நீர் விநியோகம் கடந்த சில வாரங்களாக சீர்கேடடைந்துள்ளது.

நீர்விநியோகத்திற்குப் பயன்படுத்தப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரம் அண்மையில் இனம் தெரியாத நபர்களினுல் திருடப்பட்டது. இதனையடுத்தே விநியோகம் சீர்கேடடைந்துள்ளது.

## 25 புதிய ஆசிரியர்கள்

(மன்ஞர்)

மன்ஞர் மாவட்டத்தில் 25 புதிய பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாலு கலைப்பட்டதாரி ஆசிரியர்களும் நாலு விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களும் எட்டு வர்த்தக பட்டதாரி ஆசிரியர்களும் ஒன்பது சங்கீத ஆசிரியர்களுமே புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களாகும்.

## ரூபவாஹினி

மாலை

5-30 ஏ பி ஸீ. உலக விளையாட்டுக்கள் நிகழ்ச்சி-1

6-25 'ரொம் அன் ஜெரி கார்ட்டூன் சித்திரம், (ஆங்கிலம்)

6-55 செய்திகள் (தமிழ்)

7-15 'கிரெட் எக்ஸ்மெக்ரேசன்ஸ்பிரபலநாவலாசிரியர் சார்ள்ஸ் டிக்கென்ஸின்' 'நாவல் நாடகம்,

8-15 செய்திகள் (சிங்களம்)

8-35 'ரன்கஹவனு' நாடகம் (சிங்களம்)

9-00 'ஜெபர்சன்ஸ்,- நகைச்சுவைச் சித்திரம் (ஆங்கிலம்

9-30 செய்திகள் (ஆங்கிலம்)

10-00 பிரிட்டிஸ் பியானோ வாத்தியகலைஞர்இயன் லேக் ஸ்பீஜ்ஸுடன் கலந்துரையாடல்

10-30 உலகச் செய்திகள்

10-35 நிகழ்ச்சிகள் முடிவு

## கடத்திவரப்பட்ட கேரள கஞ்சா

(மன்ஞர்)

தலைமன்ஞரிலிருந்து அனுராதபுரத்திற்கு ரயில் மார்க்கமாகக் கடத்திச் செல்லப்பட்ட பெருந்தொகையான கேரள கஞ்சாவை தலைமன்ஞர் பொலிசார் கைப்பற்றினர்.

தலைமன்ஞரிலிருந்து புறப்பட்ட ரயிலில் பொருந்தொகையான கஞ்சா கடத்திச் செல்லப்படுவதாக கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து ஜீப்பில் ரயிலைப் பின்தொடர்ந்து சென்ற தலைமன்ஞர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. அரசரத்தினம், கான்ஸ்டபிள்கள் திருவாளர்கள் லியனபத்திரன, லால், இராஜசிங்கம் ஆகியோர் பேசாலை ரயில் நிலையத்தில் வைத்து ரயில் பெட்டிகளில் சோதனை நடத்தி பெருந்தொகையான கேரள கஞ்சாவைக் கைப்பற்றினர்

## மக்கள் கஷ்டம்

[மானிப்பாய்]

யாழ் அபிவிருத்திச் சபையின்கீழ் இயங்கிவரும் ஆனைக்கோட்டை உப அலுவலகம் நடத்திவரும் நூல்நிலையம் சமீபகாலமாக மிகமோசமான நிலையில் இயங்கி வருவதாக இப்பகுதி மக்கள் புகார் செய்துள்ளனர்.

சிறப்பாக, ஒழுங்காக நடைபெற்று வந்த இந்த நூல்நிலையம் தற்போது அதிகமான நேரங்களில் பூட்டப்பட்டே காணப்படுகின்றது. இதனுல் இதனை உபயோகிக்கும் பொது மக்கள் பெரும்கஷடத்துக்குள்ளாகியுள்ளார்கள்.

சுமார் இரண்டரை லட்சம் ரூபா செலவில் பொது மக்கள் பாவனைக்கென இந்த நூல்நிலையம் கட்டப்பட்டது.

## அச்சு வேலிக்கு புதிய குரு

(மாவிட்டபுரம்]

அச்சுவேலிப் பகுதிக்கான கட்டளைக் குருவாக வண. பற்றிக் அடிகளார் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இங்கு கடமையாற்றி வந்த வண) குறூஸ் அடிகளார் மடு ஆலய பரிபாலகராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதையடுத்தே புதிய நியமனம வழங்கப்பட்டது.

## சிறுகதைப் போட்டிக்கு தெரிவு

[மானிப்பாய்]

மானிப்பாய் கல்வி வட்டார தமிழ் தினப் போட்டியில் சுன்ஞகம் இராமநாதன் கல்லூரி சிறுகதைப் போட்டியிலும், நாடகப் போட்டியிலும் யாழ் மாவட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்கு தெரிவாகியுள்ளன.

செல்வி சைலஜா துரைசிங்கத்தின் சிறுகதையும் 'அன்புத் திருமுடி' என்ற நாடகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## நிதி உதவி

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி சைவஅஞதைகள் இல்லத்துக்குபலர் நிதி உதவி அளித்துள்ளனர் அவர்கள் விபரம்:-

திரு. ஆர் சபாரத்தினம் யாழ்ப்பாணம் ரூபா 1000-00

திரு சிங்காரவடிவேல் நல்லூர் ரூபா 10001-00

திரு பாலச்சந்திரன் கொக்குவில் ரூபா 250-00

திருமதி நததகுமார் கோண்டாவில் ரூபா 300-00

திருமதி கனகராசா சங்கிலியன் வீதி ரூபா 200-00

திரு வி.ரி.பாலசிங்கம்கோண்டாவில் ரூபா 200-00

---

## காந்திக்கு அஞ்சலி

புது டில்லி அக்,3

இந்தியாவின் தேச பிதா மகாத்மா காந்தியின் 115வது பிறந்த தினம் நேற்று இந்தியாவின் பல பாகங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

புதுடில்லி ராஜ்காட்டிலுள்ள அவரது நினைவு நிலையத்தில் நடைபெற்ற காந்தி நினைவு நாள் நிகழ்ச்சியில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மற்றும் மத்திய அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திஞர்கள்

அவர் பிறந்த இடமான குஜராத்திலும், தமிழ் நாட்டில் பல இடங்களிலும் காந்தி பிறந்தநாள் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

---

## மானம்பூ உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அத்தியடி பிள்ளையார் ஆலய ஸ்ரீ மஞேன்மணி அம்பாள் மானம்பூ உற்சவம் இன்று மாலை நடைபெறும்.

★

மருதடியில் மானம் பூ விழா இன்று நடைபெறும். சுவாமி வீதிவலம் வந்துமானம் பூ திருவிழா நடைபெறும்.

★

சங்குவேலி காளி வைரவ ஆலயமானம்பூதிருவிழாஇன்று சிறப்பாக நடைபெறும்.

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30.2-30,6-30
சிவாஜி—விஜயா
பாலாடை

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ரஜனிகாந்த்
சௌகார்ஜானகி
தீ

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30.2-30.
சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா
பட்டணமா

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30
ஸ்ரீநாத், ராஜீவ், ஜோதி
ரயில் பயணங்களில்
(ஈஸ்ட்மன் கலரி)
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி

சாந்தி (யாழ்நகர்)
1—3
10-30, 2-30, 4-45
மட்டும்
Sean Conery THE MAN WITH THE DEADLY LENS
(ActionColor)

றீகல் [யாழ் நகர்]
10-30, 2-30, 6-00
ஜெய்சங்கர் - ராதிகா
ரத்தத்தின் ரத்தமே
(புதியபிரதி - ஈஸ்மன்கலர்)
10-10-84 முதல்
VISITING HOURS

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 4-30
6-45
Every lovers should see this film!
Willie games....
Phoebe crates
PARADISE
(Color) strictly for adults)
கண்டிப்பாக 17 வயதுக் குட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30, 2-30
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
நவாப் நாற்காலி

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,6-00,
சிவாஜி - ஜெயலலிதா
சவாலே சமாளி
(ஈஸ்மன்கலர்-புதிய பிரதி

வின்ஸர் [யாழ்.]
தினசரி 10-30, 2-00, 4-30.
6-30
புரூஸ் லீ யின் வாழ்க்கையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த
"BIG BOSS"
தொடக்கம் முதல் முடிவு வரை நாடி துடிக்கும் உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பை ஊட்டும் விறுவிறுப்பான கராட்டி சண்டைகள் நிறைந்த காட்சிகள்.
(புத்தம் புதிய பிரதி)

# இன்றைய பலன்

மாதம்-புரட்டாதி.
திகதி-18 (1984-10-04)
வாரம்-வியாழன்
திதி-தசமி இரவு 9-17 வரை
நக்ஷத்திரம்- உத்தராட்டம் காலை 6-49ன் மேல் திருகோணம்.

மேடம்: இலாபகரமான தொழிலில் முதலீடு செய்வீர்கள். வாகனச் சொந்தக்காரர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும் தாய் வழியால் தனவரவிற்கு இடமுண்டு,

இடபம்: காரியம் யாவிலும் கைகொடுத்து உதவுவதற்கு ஒருவர் முன்வருவார், உங்கள் சீரிய நோக்கம் எங்கும் சிறப்பைத்தேடித்தரும். தானதருமங்களில் விருப்பம் மேலிடும்

மிதுனம்: உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் வேவுபார்க்கப்படும். தொழிற்துறையில் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு சதிநடைபெறலாம்அகால போசனத்தின்மூலம் வயிற்றுக் கோளாறு ஏற்பட முடியும்.

கடகம்: களஸ்திர வழியால் கனிவான சம்பவங்களுக்கு இடம் உண்டு, வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் உருவாகும், இணைந்த இதயங்கள் இன்பத்தில் மிதக்கும் பொருள் வரவிலும் திருப்தியுண்டு.

சிங்கம்: முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றக் கூடும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள் சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரும்.

கன்னி: கலைஞர்கள் போற்றப் படுவார்கள் வெளியூர்களிலிருந்து அழைப்புக் கிடைக்கலாம், பிதாவழித் தனவரவுக்கும் இடமுண்டு, தருமகாரியங்களில் ஈடுபடுவீர்கள்,

துலாம்: புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும், கூட்டு வியாபாரத்தால் முன்னேற்றம் உண்டு புதுமனை கட்டுவதிலும் அவரது கவனம் திருப்பப்படலாம்

விருச்சிகம்: வணிகத்துறையில் புதிய வாய்ப்புக்கள் ஏற்படும் பொருள் கைவிட்டுப் போகும், மற்றவர்களிடத்தில் பொல்லாங்கு கேட்க நேரிடலாம் சிநேகித வழியால் சில தொல்லைகள் தோன்றி மறையும்.

தனுசு; தொழில்புரியும் இடத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றக்கூடும், கொடுக்கல் வாங்கல்மூலம் எதிரிகளைத் தேடிக் கொள்வீர்கள் பொருள்விடயத்தில் கவனம் செலுத்தவும்.

மகரம்: நிச்சயமற்ற நிலையால் வேதனைப் படுவீர்கள் எதிர்பார்த்த பொருள் வரவு இன்று தடைப்படலாம். உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

கும்பம்: எண்ணம் போல் வாழ்வு மலரும் சமூகத்தில் மதிப்பு உயரும், சாந்தகுணம் சிறப்பைத் தேடித்தரும்.

மீனம்: சிந்தனைத் தாக்கும் சீறிவரும் கோபம் உடன்பிறந்த சகோதரத்தின் உடல் நிலையும் கவலையைத் தரலாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

# "வடபகுதியின் பொருளாதாரம் கூட்டுறவுச்சங்கக் கொள்ளைகளால் சீரழிகிறது"

(யாழ்ப்பாணம்)

'கூட்டுறவுத்துறையிலேமுன்னேடி என்ற உன்னத பாரம்பரியம் வடபகுதிக்கு உண்டு. பல கூட்டுறவுப் பெரியார்களின் தியாக சேவையால் வளர்ச்சியடைந்த கூட்டுறவினுல் வடபகுதி பலதுறைகளில் முன்னேற்றம் அடைந்தது.

இப்பகுதியில் இயங்கி வரும் கூட்டுறவுச் சங்கங்களில் அண்மைக் காலமாக நடைபெற்று வரும் கொள்ளைச் சம்பவங்களினுல் வடபகுதிப் பொருளாதாரம் சீரழிந்து மக்கள் பட்டினியால் வாட வேண்டிய அபாயம் சூழவுள்ளது. இத்தகைய நிலையினை உன்னிப்பாக அவதானித்து யாழ். தேசிய கூட்டுறவுச் சபை மிக வேதனையும் கவலையும் அடைகின்றது என' அண்மையில் வடபகுதி கூட்டுறவுச் சங்கங்களில் நடந்த கொள்ளைபற்றி தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு சி சிவமகராசா விடுத்துள்ள அறிக்கையில்தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவிக்கையில்:

ப. நோ. கூ சங்கங்கள் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களை வழங்குகின்ற முக்கிய நிறுவனங்களாக விளங்குகின்றன. அத்தோடு பல அபிவிருத்தி முயற்சிகளிலும் ஈடுபட்டு மக்களின் பொருளாதார நலத்திற்காக உழைத்து வருகின்றன. தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பக் கூட்டுறவுச் சங்கங்களும் பொருளாதார ரீதியாக வளம் குன்றியவர்களது வாழ்க்கையை வளம்ப'டுத்த அளப்பரிய சேவை செய்து வருகின்றன.

பல நெருக்கடிகள் ஏற்பட்டாலும் அவற்றின் மத்தியிலும் ப.நோ.கூ. சங்கங்கள்மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களைவழங்கி அவர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்து வருகின்றன.

எப்பகுதியிலானுலும் மக்கள் பாதிக்கப்படும் வேளைகளிலெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் பொருளுதவிகள், பணவுதவிகள் முதலிய பல உதவிகளைச் செய்து அவர்களின் துயர் துடைக்கசேவைமனப்பான்மையுடன் முன்னின்று உழைத்து வருவதை மக்கள் நன்கு அறிவார்கள்.

இச்சங்கங்களில் ஆயிரக்கணக்கானோர் பணியாளர்களாக சேவையாற்றி வருகின்றனர் இப்பணியாளர்களின் உழைப்பில் பல்லாயிரக்கணக்கானோர் தங்கியிருக்கின்றனர்.

இது மாத்திரமல்ல, சங்க அங்கத்தவர்கள் தமது உற்பத்திப் பொருட்களை விற்று தங்கள் அன்றுட தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றுர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் சொத்தாக இருப்பதோடல்லாமல் மக்களுக்குச் சேவையாற்றும் நிறுவனங்களாகவும் விளங்குகின்றன. எனவே இந் நிறுவனங்களுக்கு மாற்றுக எந்த நிறுவனங்களுக்கும் அமைய இயலாது.

ஆதலால் இக்கூட்டுறவு நிறுவனங்களை அழியாது பேணிப் பாதுகாப்பது தமிழ் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்தை ஒளிமயமாக்க உழைக்கின்ற, உழைக்கவிரும்புகின்ற ஒவ்வொருவரதும் உன்னத கடமையாகும்.

(தி-வெ)

# சுகந்தனுக்கு மகாராணி விருது!

(பண்டத்தரிப்பு)

சென். ஜோன் அம்புலன்ஸ் படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி ஆற்றி வரும் சேவைகளைப் பாராட்டி பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத், ''எஸ்.பி.சென் ஜோன்ஸ்'' என்னும் விருதை வழங்கிகௌரவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள சென் ஜோன் அம்புலன்ஸ் படையின் தலைமைப்பீடம் லண்டனிலுள்ள சர்வதேச சென் ஜோன் நிறுவன தலைமையகத்திற்கு செய்திருந்தசிபார்சை அடுத்து மேற்படி விருது வழங்கப்பட்டுள்ளது.

விரைவில்கொழும்பில் நடைபெறவிருக்கும் வைபவம் ஒன்றில் இவ் விருதுக்கான சின்னம் உத்தியோக பூர்வமாக டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பிக்கு வழங்கப்படும்.

# வாழ்க்கைச்செலவு இம்மாதம் 2 புள்ளி குறைவு

(கொழும்பு)

செப்டம்பர் மாத வாழ்க்கைச் செலவு இரண்டு புள்ளிகளால் குறைந்துள்ளது. சுமார் எட்டு பத்துவருடங்களில் இவ்வாறு வாழ்க்கைச் செலவு புள்ளி குறைந்திருப்பது இதுவே முதல்தடவையாகும். மரக்கறிகள், தேங்காய் எண்ணெய், மீன், அரிசி போன்ற பாவனைப் பொருட்களின் விலைகள் குறைந்திருப்பதே இவ்வாறு வாழ்க்கைச் செலவு புள்ளி குறைந்திருப்பதற்குக் காரணம்.

(கொழும்பு நகரில் நுகர்வோர் பொருள் விலைகளை அடிப்படையாக வைத்தே இந்த வாழ்க்கைப் புள்ளி கணிக்கப்படுகின்றது)

முன்னைய மாதம் 562·3 ஆக இருந்த வாழ்க்கைச் செலவுபுள்ளி செப்டம்பர் மாதம் 560·3 ஆகக் குறைந்துள்ளது. இதன்படி அரச ஊழியர்களும் வாழ்க்கைச் செலவுப்படி பெறும் ஏனைய ஊழியர்களும் தமது சம்பளத் தொகையில் 4 ரூபாய் வீதம் இழப்பார்கள் என்று தெரிகிறது இப்புள்ளி கூடும் பொழுது ஒவ்வொரு புள்ளிக்கும் ரூ. 2 வீதம் அதிகரிக்ப் படுவதுபோல் குறையும் போதும் ஒவ்வொரு புள்ளிக்கும் ரூ. 2 வீதம் குறையும்.

# "நற்பிரஜைகளை உருவாக்குவதில் சாரணீய இயக்கம் பங்குவகிக்கிறது

(மாவிட்டபுரம்)

''நற்பிரஜைகளை நாட்டுக்கு அளிப்பதில் சாரணீய இயக்கம் பெரிதும் பங்கு வகிக்கிறது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, சேவை, சகிப்புத்தன்மை ஆகியவற்றை இலட்சியமாகக் கொண்ட இவ்வியக்கத்தை சிறந்த முறையில் வளர்த்தெடுக்க நாம் அனைவரும் முன்வர வேண்டும்.''

இவ்வாறு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற காங்கேசன் துறை மாவட்ட சாரணர் பாசறை விழாவினை சம்பிரதாய முறைப்படி ஆரம்பத்து வைத்துப் பேசிய யாழ். உதவி ஒன்றும் விழாவில் வெளியிடப் பட்டது. மானிப்பாய் அரசாங்க அதிபர் திரு கே. கோபாலரத்தினம் கூறினுர்.

இரு தினங்களாக நடைபெற்ற மேற்படிபாசறை விழாவில் காங்கேசன் துறை மாவட்டத்திலிருந்து பல சாரணர் குழுக்கள் பங்குகொண்டு போட்டிகளில் கலந்து கொண்டன.

இவ்விழாவின் ஓர் அம்சமாக இடம்பெற்ற தீப்பாசறை நிகழ்ச்சிகளை மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்னுள் அதிபர் திரு சாறி ஆரம்பித்து வைத்தார். அவர் தமதுரையில் கூறியதாவது:- சாரணர்களது நல்ல நோக்கங்கள், செயற்பாடுகள் யாவும் சமூகத்தில் ஊடுருவியுள்ள தீய இருளைப் போக்கி நல்ல வழிகளைக்காட்டுபவையாக இருக்கவேண்டும். தீய சிந்தனைகள், செயல்கள், நோக்கங்கள் யாவற்றையும் அழித்து நன்மார்க்கத்தை புகட்டுவதில் சாரணர் இயக்கம் பெரும்பங்கு வகிக்கவேண்டும்.

விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் மல்லாகம் மகாவித்தியாலய அதிபர் திரு. ஏ.மகாதேவன் தலைமையில் நடைபெற்ற சமயம் யாழ். மேலதிக அரசாங்கஅதிபர்திரு பி.எல்.பற்றிக் பிரதம அதிதியாக கலந்து அவற்றை ஆரம்பித்து வைத்தார்.

அவர் தமதுஉரையில்''உலகளாவிய முறையில் செயல்படும் சாரணீய இயக்கம் மதிப்பிற்கும் நம்பிகைக்கும் உரியசிறந்ததோர் இயக்கமாக திகழ்கிறது. சாரணீய இயக்கத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவரும் சாரணர் என்ற முறையில் பெருமை பெறுகிறுன்''என்று குறிப்பிட்டார்.

பாசறை விழாவின் 5ஆண்டு நிறைவையொட்டி மலர் தொகுதி உதவி அரசாங்க அதிபர் திரு.எஸ்.செபநாயகம் பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கினுர்.

# ஒரு நாட்டின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விடாதீர்கள் இது ஒரு பல்துறைப் பயிற்சிநெறி மேலும் விரிவாகக் கூறுவதானுல் இது ஒரு குட்டிப் பல்கலைக் கழகம் என்றுர்.

அடுத்து இப்பயிற்சி நெறியின் இணைப்பாளரும், திட்டமிடல் அதிகாரியுமான திரு வி. எஸ். சுவாமிநாதன் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: மாதர்களின் அபிவிருத்திக்காக ஜனுதிபதியின் தலைமையின் கீழ் இயங்கிவரும் மகளிர் பணியகம் பல்வேறு திட்டங்களை நடைமுறைப் படுத்தி மகளிருக்குப் பயிற்சிகள் அளித்துச் சுயதொழிலில் ஈடுபடுத்துவதால் அவர்களின் வாழ்வுயர்வதுடன் நாடும் உயருகிறது என்றுர்.

# கன்னியாகுமரி—காஷ்மீர் ரயில்சேவை ஆரம்பமானது

[புதுடில்லி]

இந்தியாவின் தெற்கு முனையான கன்னியாகுமரியிலிருந்து வடக்கு முனையான காஷ்மீர் வரைவிடப்பட்ட அதிநவீன கடுகதி ரயில் நேற்றுக் காலை 10.20 மணியளவில் தனது முதலாவது பயணத்தை ஆரம்பித்தது.

சுமார் 3878 கிலோ மீற்றர் தூரத்தை 68 மணிநேரத்தில் இந்தரயில் கடந்து செல்லும்.

தமிழ்நாடு, கேரளம், கர்னுடகம், மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், உத்தரப் பிரதேசம், ஹரியானு, இமாசலப் பிரதேசம், காஸ்மீர் ஆகிய 9மாநிலங்கள் டெல்லி யூனியன் பிரதேசம் ஆகியபகுதிகளினுல் இந்தரயில் செல்கிறது.

புதன்கிழமைகளில் கன்னியாகுமரியிலிருந்தும், சனிக்கிழமைகளில் காஷ்மீரில் இருந்தும் இந்தக் கடுகதி ரயில் தனது சேவையை ஆரம்பிக்கும்.

# மின்னேரியா - 23 அங்.
# குண்டசாலே - 18 அங்.

[கொழும்பு]
பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட காகிதத்தில், இங்குள்ள அரசாங்க அச்சகத்தில், மின்னேரியா, குண்டசாலே ஆகிய தொகுதிகளுக்கான இடைத் தேர்தலுக்கு மிக நீண்ட வாக்குச் சீட்டுக்கள் நேற்று அச்சிடப்பட்டன. மின்னேரியாத் தொகுதிக்கு இருபத்தி மூன்று அங்குல நீளத்திலும், குண்டசாலைத் தொகுதிக்கு பதினெட்டு அங்குல நீளத்திலும் இந்த வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டன, இலங்கையில் பாவனையிலுள்ள சகல பொருட்களும் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு சின்னங்களாகியுள்ளது குறிப்பிடத் தக்கது.


# மரண அறிவித்தல்
## சகோதரி (Sister)
## கிறேஸ் அன்ரனி
(இலங்கை பெந்தெகொஸ்தே சபை)
சுண்டுக்குளி

கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார். சகோதரி கிறேஸ் அன்ரனி இவரின் அடக்க ஆராதனை 4-10-84 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுண்டுக்குளி இலங்கை பெந்தெகொஸ்தே சபை மண்டபத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக கொட்டடியிலுள்ள இலங்கை பெந்தெகொஸ்தே சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், விசுவாசிகள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

111, கண்டிவீதி, சுண்டுக்குளி. 22

# மரணஅறிவித்தல்
## திருமதி உஷாயினி சதாநாதன்
(மாலா)

திரு. R. சதாநாதன் (Saudhi Arabia) அவர்களின் அன்பு மனைவி உஷாயினி (மாலா) காலமானார். இவர் திருமதி சரஸ்வதி ராஜநாதன் அவர்களின் அருமை மருமகளும், திரு காங்கேசு (ஓய்வுநிலை தபால் நிலைய), திருமதி சரோஜினிதேவி காங்கேசு ஆகியோரின் அருமை மகளும், ஜெயலோகநாதன் (Ceylon Theatres Ltd) தயாநாதன் (U. K). கமலநாதன் (Germany) விமலநாதன் (Hatton National Bank Colomo) ஆகியோரின் மைத்துனியும் கிருஷ்ண மோகன் (Inter Contional Hotel Dubai), ஜயந்த குமரன் (Lecturer Peradeniya), பிறேமினி, ரமாயினி, சுபாஜினி, முரளிதரன் ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 6-10-84 சனிக்கிழமை காலை 9-00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகிறோம்.
செல்லமுத்து றோட்,
மானிப்பாய் 38

# மரணஅறிவித்தல்
## திரு. மூத்தப்பு சின்னத்துரை
(ஓய்வுபெற்ற கட்டிடத் திணைக்கள முதல்வர்
Director of Buildings)

இவர் 2-10-84ல் கொழும்பில் அகாலமரணமானார். இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், கோசலை நாயகி, மிதிலைச்செல்வி (ஆயுள்வேதப்பகுதி விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்), Dr நரேந்திரன் இருதயநோய்ப் பகுதி கொழும்பு, கோகுலகுமாரன் (B S C) இரவீந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு மு யெகதீஸ்வரன் (Superintendent, கரும்புத் தொழிற்சாலை சுந்தளாய்), ஆ சிறீகாந்தன் (பொறியியலாளர், வரகன்ஸ், யாழ்ப்பாணம்), Dr உமா ஈஸ்வரி (போலீஸ் ஆஸ்பத்திரி, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் இராகுலனின் பேரனும் நடராசா ஆச்சியம்பா நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். அவரது ஈமக்கிரியைகள் இன்று 4-10-84 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரது ஏழாலை பேற்கு இல்லத்தில் நடைபெற்று குடுப்ப மயானத்தில் தகனம்செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவியும், பிள்ளைகளும், மருமக்களும்.**

கொழும்பு விலாசம்;
18, குணசேகரா லேன்,
பொரளை.
32


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Eelanadu Telephone 22389 - 24126.

## ராணுவ...
(1-மபக்கத் தொடர்ச்சி)

குழு தெரிவித்துள்ளது,

ஐந்து அங்கத்தினர்கள் இந்தக் கொலை சம்பந்தமக விசாரணை செய்தனர்

## யாழ். ஐ. வி.
(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. என்றும் கூறப்படுகிறது.

இதேசமயம், சங்கத்தினர், ஜனாதிபதியிடம், ஒரு கோடி ரூபா நஷ்டஈடு கோரியதாகவும், இதற்கும் சாதகமான பதில் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

சங்ககட்டிடம் தீக்கிரையானதால் சுமார் ஒரு கோடி 40 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதாக, தெரிவிக்கப்பட்ட து. (க)

## முல்லைத்தீவில்..
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திடீர் சோதனை நடத்தி நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்களை விசாரணைக்கு அழைத்துச் சென்றதால் மக்கள் பீதியடைந்திருப்பதாகவும் குழுவினர் தெரிவித்தனர்.

கட்டாக்காலி மாடுகள் பயிர்களை அழித்து வருவதாகவும் அக்குழுவினர் தெரிவித்தனர் வேலி அடைக்காமல் பயிர் செய்யக்கூடாது என்ற அதிகாரிகளின் கட்டளையினால் விவசாயிகள் பாதிப்படைந்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

செம்மலை, நாயாறு கொக்கிளாய், கொக்குதொடுவாய் ஆகிய பகுதிகளில் எரிபொருள் தட்டுப்பாட்டினால் விவசாயிகள் பாதிப்படைந்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

இவ்விஷயங்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதாக அரசாங்க அதிபர் உறுதியளித்தார். (க)

## யாழ். பல்கலைக்...
(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தினார்கள்.

யாழ்,பல்கலைக்கழகத்தில் பயிலும், ஹாட்லிக்கல்லூரி மாணவர் சுமார் 80 பேர் நேற்றுக்காலை கச்சேரிக்கு வந்து அரசாங்க அதிபரின் காரியாலயத்திற்குள் சென்று அரசாங்க அதிபரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இச்சந்திப்பின் போது யாழ். மாவட்டஅமைச்சின் இணைப்பு அதிகாரியும் உதவி அரசாங்க அதிபருமானதிரு எஸ். பி பாலசிங்கம், திட்டமிடல் பிரதி பணிப்பாளர் திரு எஸ். எஸ். சிவதாசன், பொதுசன தொடர்பு அதிகாரியும், உதவி அரசாங்க அதிபருமான திரு. எஸ் சண்முகசுந்தரமும் சமுகமளித்திருந்தனர்.

மாணவர்கள் கைகளில் சுலோக அட்டைகளும் காணப்பட்டன

மாணவர்கள், ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரின் பிரதியொன்றை அரசாங்கஅதிபரிடம் கையளித்தனர்

வடமராட்சியில் சகல பாடசாலைகளும் மூடப்பட்டிருப்பதாகவும், அங்கு பகிஷ்கரிப்பு நடக்கவில்லையென்றும் பெற்றோர் பீதியின் காரணமாக பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பவில்லையென்றும், மாணவர்களுக்கு போதிய பாதுகாப்பில்லையென்றும் சுமார் 15,000 மாணவரின் கல்வி பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்

மேலிடத்துடன் தொடர்பு கொண்டு இதுபற்றி தெரிவிப்பதாகவும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் - மாணவர் குழு சந்திப்பதற்கு ஏற்பாடு செய்ய முயற்சிப்பதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்

இதைத் தொடர்ந்து மாணவர்கள் அமைதியாக அங்கிருந்து சென்றனர். (க)

### கிளிநொச்சி சந்தியில்
# ஒரே கம்பத்தில் இரு சடலங்கள்
## 11 கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டனராம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சியில் நேற்று அதிகாலை கரடிப்போக்குச் சந்திக்கருகில் ஒரே மின்கம்பத்தில் இரு சடலங்கள் காணப்பட்டன.

இவற்றிலொரு சடலம்உருத்திரபுரம் சிவநகரைச் சேர்ந்த தில்லைச்சிவனுடையதென்றும், மற்றைய சடலம் குமரபுரம் பரமேஸ்வரனுடையதென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவர்கள் பதினொரு கொள்ளைச்சம்பவங்களிலீடுபட்டதாகவும், இதனால் மரணதண்டனை விதிப்பதாகவும்அருகில்காணப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துண்டுப் பிரசுரத்தின் கீழ் 'தமிழீழவிடுதலை இராணுவம்' என்று எழுதப்பட்டிருந்தது.

இவர்களில் தில்லைச்சிவன் திருநெல்வேலியில்அண்மையில் மின் கம்பத்தில் கட்டப்பட்டு, அவிழ்த்துவிடப்பட்டவரெனத் தெரியவருகிறது மற்றைய நபர் பரமேஸ்வரன் கிளிநொச்சிப் பொலிசிலிருந்து தப்பியோடியதாகக் கூறப்படுகிறது.

## பொலிஸ்...
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரி நூல்நிலையமும் சில வகுப்பறைகளும் செப்டம்பர் முதலாம் திகதி தீக்கிரையாக்கப்பட்டன. அதிரடிப்படையினர் சுமார் 3500 மாணவர் பயிலும், ஹாட்லிக்கல்லூரி மெதடிஸ்த மகளிர் கல்லூரிக்கு அருகிலுள்ள வளவில் தங்கியுள்ளனர். கல்லூரிகளுக்கு அருகில், அதிரடிப்படை தங்கியிருப்பதால், ஏற்பட்ட பயத்தினாலும் பாதுகாப்பின்மையாலும் மாணவர்கள், கல்லூரிகளுக்கு செல்ல முடியாமல் உள்ளது.

வடமராட்சிப் பிரிவில் இப்படியான நிலைமை காரணமாக சுமார் 15,000 மாணவர்கள் பாடசாலை செல்லவில்லை இதறகு ஆட்சேபம் தெரிவிக்கும்முகமாகமாணவர்செப் 12ம் திகதி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர் இது பற்றி, தங்களுக்கும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர். கல்வி மந்திரி ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

''செப்டம்பர் 30ம் திகதி முதல் வடமராட்சி மாணவர்கள் தொடர்ந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.'' [க]

## வாணி விழா
(கொழும்புத்துறை)

பொன்னாலை இளஞ்சுடர் சனசமூகநிலைய வாணிவிழா இன்று சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. நிலையத்தலைவர் திரு க. மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வாணிவிழாவில் திரு. எஸ். கிருஷ்ணர் சிறப்புரை நிகழ்த்துவார்.

## இன்றுமுதல்...
(1ம் பக்கத் தொடர்ச்சி)

போவைச் சேர்ந்த இரண்டாயிரத்து முந்நூறு குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் வேறு தூரஇடங்களுக்குச் செல்வதை ஊழியர்களும், தொழிலாளர்களும் விரும்பமாட்டார்கள் என்றும் வருமானம்காணாததால் அரசின் உதவி நன்கொடைப்பணத்துடன் டிப்போ இயங்குகிறது என்றும் சபைத் தலைவர் அமைச்சரிடம் வலியுறுத்தியிருந்தார்.


# மரண அறிவித்தல்
## திரு. வி. சோமசுந்தரம்

திரு. வி. சோமசுந்தரம் (சட்டத்தரணியும்,இளைப்பாறிய கிராமக் கோட்டு நீதிபதியும்) காலமாகிவிட்டார். இவர் விஜயலக்ஷ்மியின் அன்புக் கணவரும், திருமதி இந்திரா சீவரட்ணம் (ஆசிரியை - கனகரட்ணம் மகாவித்தியாலயம்), திருமதி சுசீலா இராஜரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியை சென்ற் கிளயஸ்), திருமதி லலிதா நவரத்தினம் (ஆசிரியை-நைஜீரியா), திருமதி றஞ்சினி துரைசிங்கம், திருமதி மீனா சிறீறங்கநாதன் (இலண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், காலஞ்சென்ற திரு. சீவரட்ணம் (தேயிலை ஆராய்ச்சி நிலையம்), திரு. இராஜரட்ணம் (சவுதிஅரேபியா), நவரட்ணம் (நைஜீரியா), வைத்திய நிபுணர் துரைசிங்கம் (நந்துபிட்டிவெல), சிறீறங்கநாதன் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனுமாவர். இவரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 359/30, கோயில் வீதி, நலலூரிலிருந்து வியாழக்கிழமை (4-10-84) மாலை 4 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 40

# மரணஅறிவித்தல்
## திருமதி தர்மாவதி இரத்தினசபாபதி

தர்மாவதி இரத்தினசபாபதி சிவபதமடைந்தார். இவர் இரத்தினசபாபதி (Buildings Dept. வவனியா) அவர்களின் அன்பு மனைவியும், இளைப்பாறிய தபால் அதிபர் நாகநாதர் தம்பதிகளின் மகளும், ரமேஷ், கணேஷ், குமரேஷ் ஆகியோரின் தாயாரும், ஸ்ரீ புஷ்பநாத (Duputy Principal Union College), பாலசுப்பிரமணியம் (Engineer, Telecommunication), விஜயநாதன் (Canada), சிவநாதன் (Valuation), சத்தியநாதன் Engineer Luhlen Co), பத்மாதேவி, கௌசலாதேவி (Canada), சத்தியதேவி (Londan), காலஞ்சென்ற புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அங்கயற்கரசி பரமேஸ்வரி, லலிதா, கலாமதி, வேலும்மயிலும். பொன்னம்பலம், பிரேமச்சந்திரன், சண்முகநாதன் ஆகியோரின் மைத்துனியுமாவார். ஈமைக்கிரிகைகள் திருநெல்வேலி இல்லத்தில் 4-10-84 வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் மாலை 4-30 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக பலாலி வீதி, திருநெல்வேலி இல்லத்திலிருந்து திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் நண்பர்களும், உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம். 42